இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

வருடாந்த அறிக்கை

2020

அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

354/2, நிபுணதா பியச, 7ம் மாடி, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு 05.

நிறுவனத்தின் பின்புலம்

நிறுவனம் : இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

அமைச்சு : அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

முகவரி : 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி, கொழும்பு 05

மின்னஞ்சல் முகவரி : director.nhrdc@gmail.com

இணையத்தள முகவரி : www.nhrdc.gov.lk

தொலைபேசி : 0112595679

பக்ஸ் : 0112595680

கணக்காய்வாளர : கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்

வங்கியாளர்கள் : இலங்கை வங்கி
மக்கள் வங்கி

தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை நெறிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

பெறுமதிகள்

- குழுக்கலாசாரம்
- வாடிக்கையாளர் முக்கியத்துவம்
- படைப்பாற்றல்
- பாகுபாடு காட்டாமை

தலைவரின் செய்தி

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது மனிதவள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவதற்காக 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மனிதவள மேம்பாடு தொடர்பாக கொள்கை வழிகாட்டுல்களையும் ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் வழங்குவதே சபையின் முக்கிய நோக்கமாகும்.

நாட்டின் தொழிற் சந்தையில் கொவிட் 19 இன் தாக்கத்தல் ஏற்பட்ட பிரச்சினைகளை கண்டறியும் நோக்கத்துடன், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில், கட்டுமான தொழில், வெளிநாட்டு வேலைவாய்பு, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளரகள், ஆடைகள், தளபாடங்கள், விமான போக்குவரத்து மற்றும் தகவல் தொழிலநுட்பம் போன்ற பொருளாதார ரீதியில் மிக முக்கியம் வாய்ந்த துறைகள் குறித்து நிகழ்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சட்டம், கல்வி மற்றும் நிதி நிலைமைகளாகிய உப அம்சங்களின் ஆய்விற்கு அமைவாக பரிந்துரைகள் செய்யப்பட்டு இறுதியறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

NHRDC தொடர்புடைய பங்குதாரர்களின் தகவல் இடைவெளி பூர்த்தி செய்வதற்கா ஆண்டுதோறும் புள்ளியியல் வெளியீடு மற்றும் மனித மூலதன நுண்ணறிவுகளை வெளியிடுகிறது. அண்மையில் புள்லடின் 2020 மற்றும் மனித மூலதன நுண்ணறிவு NHRDC இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

தற்போதுள்ள சூழ்நிலையில் ஆட்சேர்ப்புக்கள் அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. 2020 ஆண்டில் உதவி பணிப்பாளர் (ஆராயச்சி) 03 அபிவிருத்தி அலுவலர்கள் அளணி வெற்றிடம் காணப்படுகின்றது. ஒரு உதவி பணிப்பாளர் மற்றும் நான்கு ஆராய்ச்சி அலுவலரகள் மற்றும் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் மட்டுமே தற்போது சட்டத்தின் முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளனர். 2020 ஆம் ஆண்டு சபையின் தலைவர் /பிரதம நிறைவேற்று அதிகாரியாக 22.06.2020 அன்று திரு. பத்மசிறி ஜயமான்ன நியமிக்கபடும் வரைக்கும் யாரும் நியமிக்கப்படவில்லை. அவர் 16.11.2020 அன்று திடீரென காலமானர் அதனால் 31.20.2020 இல் வெற்றிடமாக காணப்பட்டது.

அதே நேரத்தில் கொவிட் 19 தொற்று நிலைமையால் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக நிறுவனத்தின் பெரும்பாலான அலுவலர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தார்கள். கொவிட் 19 தொற்று நிலைமையில் நிறுவனத்தின் பயனுள்ள சேவை வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நிகழ்நிலை முறைமையூடாக கூட்டங்கள் ஒழுங்கமைத்தல், பல்வேறு பங்குதார்கள் மற்றும் NHRDC ஊழியர்களுடன் Zoom app வாயிலான கலந்துரையாடல்கள் மற்றும் NHRDC ஊழியர்களுக்கான இயலளவு விருத்தி திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இருப்பினும், இந்த சாவால்கள் NHRDC யை மேலும் வலுப்படுத்த புதிய அனுபவங்கள் வழிவகுத்தது. இவ்வாறன இக்கட்டான சூழ்நிலையில் எமது நிறுவனம் நாட்டுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். நீங்கள் நம்பிக்கைகொள்ள கூடியவகையில் சவால்களுக்கு மத்தியில் NHRDC ஒரு வலுவான நிறுவனமாக தொடரும்.



தலைவர்
இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை

பொருளடக்கம்

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம் 1

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவன கட்டமைப்பு 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு 6

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள் 7

5. 2020 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் 11

5.1 தேசிய மனித வள அபிவிருத்தி திட்டத்தை (NHRDP) உருவாக்குதல் 11

5.2 இலங்கை ஊழியர்களுக்கு கொவிட் - 19 ஏற்படுத்தி துறைசார் அழுத்தங்கள் தொடர்பான கணக்கெடுப்பு 14

5.3 உள்நாட்டு தொழிற்துறையின் தற்போதைய நிலை மற்றும் அது சார்ந்த மனித வள பிரச்சினைகள் 17

5.3.1 பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழில் 18

5.3.2 பித்தளை கைத்தொழில் 20

5.3.3 சமுத்திர, நன்நீர் மற்றும் நீரியல் உயிரின வளர்ப்பு, இறால் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு 23

5.3.4 நெற்பயிர்ச் செய்கை 26

5.3.5 சோள பயிர்ச்செய்கை 27

5.3.6 கித்துள் பயிர்ச்செய்கைக்கான சூழமைவு அறிக்கை 29

5.3.7 சமூர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் தற்போதைய நிலைமை 32

5.3.8 இலங்கையின் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான சூழமைவு அறிக்கை 37

5.4 திண்மக் கழிவு முகாமைத்துவ தொழில்முனைவோரை உருவாக்குதல் 43

5.5 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை 44

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2020 ஆண்டின் வெளியீடுகள் 45

7. நிதியியல் நிலமைக் கூற்று 46

8. நிதிச் செயலாற்றுகை கூற்று 48

9. தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு மாற்றக்கூற்று 49

10. காசுப் பாச்சல் கூற்று 50

11. குறிப்புகள் 52

12. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் 60

13. கணக்காய்வு அறிக்கை 64

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம்

மனித வள அபிவிருத்திக்கான முக்கிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்தலுக்கு உதவுதல் மற்றும் அந்த சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய மனித வள அபிவிருத்தியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்குவதன் மூலம் அனைத்து பணிப்பொறுப்புகளிலும் முதன்மையான வகிபாகத்தை கொண்டுள்ளது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கும், அரசாங்கத்துக்கும் வழங்குதல் சபையின் பிரதான நோக்கமாகும்.

1.1 நிறுவனத்தின் அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987 ஜூன் 05 ஆம் திகதி இளைஞர் விவகார அமைச்சின் ஒரு அலகாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஆரம்பமானது. பின்னர் அது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விடய பரப்பின் கீழ் 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சுயாதீனமான நியதி சபையாக நிறுவப்பட்டது. அதிலிருந்து, அதாவது 2000 ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. குறுகிய காலத்தினுள் மீண்டும் 2001 ஆண்டில் அது கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர், அரசாங்கம் மாற்றமடைந்த பின்னர் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் நிறுவனம் கொண்டுவரப்பட்டது. குறுகிய காலத்தினுள் பல அமைச்சுக்களின் கீழ் செயற்பட்ட இந்த நிறுவனம் தற்போது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

1.2 நோக்கு

எமது ஊழியர் படையின் எதிர்காலம் தயார்

1.3 பணிக்கூற்று

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய வினைத்திறனான கொள்கைகள் மற்றும் புத்தாக்க தந்திரோபாயங்களை உருவாக்குதல், அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்துதல்.

1.4 குறிக்கோள்

மனித வள அபிவிருத்தி தொடர்பில் கொள்கை ரீதியான வழிகாட்டல்களை அரசுக்கு வழங்குவதற்கு பொருத்தமான சட்டக கட்டமைப்பை உருவாக்குதல் இலங்கை மனித வள அபிவிருத்தி சபையின் குறிக்கோளாகும். மனித வள அபிவிருத்தி, செயன்முறைகளை திட்டமிடுதல், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வள ஆற்றலை அதிகரிப்பதற்கும் இந்த நிறுவனம் பொறுப்பாக இருக்கிறது.

சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறானதாகும் :

I. பின்வரும் மனித வள அபிவிருத்தி தொடர்பான தர்க்கரீதியான நியாயப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அடங்கலாக அனைத்து துறைகளிலும் தேசிய மனித வள கொள்கை தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
   a. தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   b. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
   c. வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்
   d. பலவீனமான குழு நபர்களுக்கான சமூக பாதுகாப்பை வடிவமைத்தல்
   e. பொருளாதார மறுசீரமைப்புடன் உரிமைகளை பேணுதல்

II. தேசிய கொள்கைக்கு ஏற்புடையதாக அரசுக்கு சமர்ப்பிப்பதற்கான மனித வள அபிவிருத்தி தொடர்பான திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சருக்கு விதந்துரை செய்தல்.

III. காலத்துக்கு காலம் மனித வள அபிவிருத்தி கொள்கை, அமுல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்தட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரிசீலித்தல், தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சருக்கு விதந்துரை வழங்குதல்

IV. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், மற்றும்

V. இந்த சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலுமான எந்தவொரு கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, ஏனைய எந்தவொரு அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயத்துக்கு அவ்வாறான கருத்திட்டம் தொடர்பானதாக இருக்கும் போது, அந்த அமைச்சரின் ஒத்திசைவுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். மற்றும்

VI. சபையின் கருத்துக்கு அமைய தேசிய நோக்கங்களுக்கு ஏற்புடையதாக மனித வள அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாதகமான அல்லது எதிர்பாராது தோன்றும் ஏனைய அனைத்து கருமங்களையும் மேற்கொள்ளுதல்.

1.5 சபையின் அதிகாரம்

1997 / 18 இலக்க இலங்கை தேசிய மனித அபிவிருத்தி சபை சட்டத்தின் 16 (2) (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய சபையின் அதிகாரம் பின்வருமாறானதாகும்,

a. சபையின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய அளவீடு, புலனாய்வு கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

b. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் விஷேட நிபுணர்கள், தொழில்வாண்மையாளர்கள் அல்லது சாதாரண மக்களின் கருத்தை கேட்கும் நோக்குடன் பொது அல்லது தனிப்பட்ட கலந்துரையாடல்களை நடத்துதல்.

c. இலங்கைக்கு வெளியே சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் தொடர்புகளை உருவாக்குதல் மற்றும் பேணிவருதல்

d. இந்த சட்டத்தின் கீழ் அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை எட்டுவதற்கும் மேற்கொள்வதற்கும்

e. நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மனித வள அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்

f. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் மனித வள அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் தரவு வங்கியை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்

g. ஏதாவதொரு வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை திறத்தல் மற்றும் பேணி வருதல்

h. அசையும் மற்றும் அசையா மானியங்கள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல், பெற்றுக்கொள்ளுதல்.

i. மனித வள அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் விஷேட நிபுணத்துவம் கொண்ட குழாத்தை விருத்தி செய்யும் நோக்குடன், அந்த அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

j. அந்த கருமங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான அவ்வாறான குழுக்கள், நிபுணத்துவ குழுக்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களை நியமித்தல்.

k. தேவையானதென சபையால் கருதப்படும் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதி சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

l. சபையின் கருத்துக்கு அமைய, சபையின் கருமங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் மற்றும் செயலாற்றுகைக்கு தேவையானதென கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவன கட்டமைப்பு

இந்த சபையானது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கீழ் தொழிற்படுகின்றது. அத்துடன் உள்ளூராட்சியானது 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இருபது உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களில் பதினைந்து (15) நபர்கள் முன்னாள் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள் மீதமுள்ள ஐந்து உறுப்பினர்கள் பொருத்தமான நிறுவனங்களை சேர்ந்தவர்களாகவும் அதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட துறைகளில் காணப்படும் அனுபவம் மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு 05 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் அவர்களில் இரண்டு நபர்கள் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். எனினும், பதவிவழி அங்கத்தவர்களின் எண்ணிக்கை இலங்கை சோசலிசக் குடியரசு யாப்பின் 44,45 மற்றும் 47ஆம் பந்திகளின் கீழ் மேற்கொள்ளப்படும். விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அவர்களில் ஒருவரை நிறைவேற்று தலைவராக நியமிக்க சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைவர் பிரதம நிறைவேற்ற அலுவலர் ஆவார். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி 2153/12 இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வகுக்கப்பட்டுள்ள விடயத்தின் பிரகாரம் 31.12.2020 இல் ஆளுநர்கள் குழுவின் அமைப்பு பின்வருமாறு.

சட்டத்தின் 3 (1) (அ) தொடக்கம் (பி) வரையான பிரிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

1. திரு. பத்மசிறி ஜயமான்ன, தவிசாளர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை
2. பேராசிரியர். கபில பெரேரா, செயலாளர், உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பத்துக்கு பொறுப்பான அமைச்சு
3. திரு. அனுராதா விஜேகோன், செயலாளர், இளைஞர் விவகாரத்துக்கு பொறுப்பான அமைச்சு
4. திரு. எம்.பி.டி.யு.கே. மாப்பா பத்திரண, செயலாளர், தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
5. திரு. ஜே.ஜே. ரட்ணசிறி, செயலாளர், பொது நிர்வாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
6. மருத்துவ கலாநிதி. (மேஜர் ஜெனரல் ஓய்வுபெற்ற) எஸ்.எச். முனசிங்ஹ, செயலாளர், சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
7. திரு. டப். ஏ. சூலானந்த பெரேரா, செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
8. மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) சுமேத பெரேரா, செயலாளர், விவசாய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
9. பேராசிரியர். தயாநந்த விஜேசேகர, தலைவர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
10. திரு. ஜனக்க ஜயலத், பணிப்பாளர் நாயகம் (பதில்), மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
11. பேராசிரியர். ஹரிஸ்சந்ர அபேகுணவர்த்தன, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
12. பேராசிரியர். சம்பத் அமரதுங்க, தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
13. திரு. தரங்க நலீன் கம்லத், தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
14. திருமதி. ஜே.ஜீ.டி. சேனநாக்க, செயலாளரின் பிரதிநிதி, நிதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு

சட்டத்தின் 3 (2) (ழு) பிரிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

1. கலாநிதி. சத்துரங்க கெப்பிற்றியாகம (நியமன உறுப்பினர்)
2. கலாநிதி. (திருமதி) ரணாலி பெரேரா (நியமன உறுப்பினர்)
3. திரு. பி. ரணேபுர (நியமன உறுப்பினர்)
4. திரு. மகேஸ கொட்டுவெல, அற்றர்னி அற் லோ (நியமன உறுப்பினர்)


2020 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பிகர்களின் வரவு

#	**உறுப்பினர்**	16.07.2020	20.09.2020
01	தலைவர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை	√	√
02	செயலாளர், உயர்கல்வி கல்வி மற்றும் தொழில்நுட்பம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	
03	செயலாளர், கல்வி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	√
04	செயலாளர், தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	*
05	செயலாளர், பொது நிர்வாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	*	*
06	செயலாளர், சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	√
07	செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	-
08	செயலாளர், விவசாய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	-	√
09	செயலாளர், இளைஞர் விவகார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	√
10	தலைவர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு	√	√
11	பணிப்பாளர் நாயகம், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு	√	√
12	தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு	√	*
13	தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	√	√
14	தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	√	√
15	செயலாளரின் பிரதிநிதி, நிதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு	√	√
16	திரு. பி. ரணேபுர (நியமன உறுப்பினர்)	√	√
17	திரு. மகேஸ் கொட்டுவெல, அற்றர்னி அற் லோ (நியமன உறுப்பினர்)	√	√
18	கலாநிதி. சத்துரங்க கெப்பிற்றியாகம (நியமன உறுப்பினர்)	√	√
19	கலாநிதி. (திருமதி) ரணாலி பெரேரா (நியமன உறுப்பினர்)	√	√
	பங்கேற்றவர்களின் மொத்த எண்ணிக்கை	17	14

√ பங்கேற்றார்

* பிரதிநிதி பங்கேற்றார்.
- சமூகமளிக்கவில்லை.

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு



4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள்

பதவி நிலை	அனுமதிக்கப்பட்ட ஆளணி	31.12.2020 இல் பணியாளர்கள்	31.12.2020 இல் பதவி வெற்றிடம்	பெயர்
தவிசாளர்	01		01	-
பணிப்பாளர்	01	01	-	கலாநிதி. கே.ஏ. லலிததீர
உதவிப் பணிப்பாளர்	03	02	01	திருமதி. ஜெ.ஏ.சி.பீ.ஜயசிங்க திருமதி. எஸ்.எஸ். களுஆராச்சி
சபையின் செயலாளர்/ சட்ட அலுவலர்	01	01	-	திருமதி. ஜி.ஜி. கசுனி உத்பலா
ஆராய்ச்சி அலுவலர்	04	04	-	திரு. த. செந்தில்நாதன் செல்வி. என்.டி.எதிரசிங்கே திருமதி. ஆர்.டி.சி.எஸ். ராஜபக்ச செல்வி. யு.எம். வீரசேன
நிர்வாக உத்தியோகத்தர்	01	01	-	திருமதி.கே.வி.எஸ். எரங்கா
மொழிபெயர்ப்பாளர்	01	-	01	-
அபிவிருத்தி உத்தியோகத்தர்	04	01	03	திரு.கெ.பி.பி.பெரேரா
தவிசாளர் பீ.ஏ	01	-	01	
முகாமைத்துவ உதவியாளர்	08	06	02	திரு.சி.ஆர்.மத்தகே திருமதி.எம்.ஜி.என். டில்ஹரி திருமதி. ஆஸா .எதிரசிங்க திருமதி. கே.சி.முத்துமால திருமதி. ஜி.எம். சத்தமங்கல செல்வி.ஹிருனி சாமோதி
சாரதி	04	04	-	திரு.ஜி.எம்.பின்னதுவ திரு.டெறன்ஸ் பியால் திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்த்தன திரு.ஹயான் ஜீவந்த
அலுவலக உதவியாளர்	04	03	01	திரு.என்.ஜி.நதுன் மதுரங்க திரு.டபிள்யு.ஆர்.ஏ.பிரினஸ் கிரான்வில் செல்வி.ஏ.நயனா பிரியதர்சினி
மொத்தம்	**33**	**23**	**10**	

4.1 ஆட்சேர்ப்பு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டிற்கு அமைவாக சபைக்கு அங்கிகரிக்கப்பட் ஆளணி 33 ஆகும். ஆனால் 31.12.2020 இல் ஆளணி 23 ஆக இருந்தது. அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டாதல் இந்த ஆண்டில் எந்தவொரு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. 22.06.2020 அன்று திரு பத்மசிறி ஜயமான்னே அவர்கள் பிரதம நிறைவேற்று அதிகாரியாக/ தவிசாளரநியமிக்கப்பட்டிருந்தார். அவர் 16.11.2020 அன்று திடிரென காலமானர் மேலும் 31.12.2020 வரை அந்த பதவி வெற்றிடமாக இருந்தது.

4.2 பதவி விலகல்

பெயர்	பதவி	பதவி விலகிய திகதி
திரு.எஸ். தனிகசீலன்	உதவிப் பணிப்பாளர் (ஆராச்சி)	31.12.2020

4.3 2020 ஆம் ஆண்டு காலத்தில் பதில் கடமையாற்ற சபையினால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள்.

பெயர்	பதவி	நியமனத் திகதி
திருமதி. ஜெ.ஏ.சி.பி.ஜெயசிங்கே	உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) (பதில் கடமை)	02.11.2020

4.4 உள்ளுர் பயிற்சி

பணியாளர்களின் பாட அறிவை மேம்படுத்தும் நோக்கில் மதிபப்ாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அவர்களுக்கு உள்ளுர் பயிற்சி வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் கலந்து கொண்ட அதிகாரிகளின் விபரங்கள் பின்வருமாறு.

பெயர்	பதவி	பாடநெறியின் பெயர் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	நிறுவனம்
திருமதி.ஜி.ஜி. கசுனி உத்பலா	சபையின் செயலாளர்/ சட்ட அலுவலர்	கூட்டாண்மை வரைபுகள்	RH பயிற்சி மற்றும் அபிவிருத்தி.
திருமதி. சுஜிவா களுஆராச்சி திருமதி. நதிஸா. டில்ஹரி திருமதி. கே.சி.முத்துமால	உதவிப் பணிப்பாளர (நிதி) முகாமைத்துவ உதவியாளர்	நிதி கூற்று மற்றும் ஆண்டறிக்கை தயாரிப்பு/ தனியர்துறை நிதிக்கணக்கு தயாரிப்பு	இலங்கை பட்டய கணக்காளர்
கலாநிதி. கே.ஏ. லலிததீர திருமதி. ஜெ.ஏ.சி.பீ.ஜயசிங்க திருமதி. கசுனி உத்பலா திரு. சுஜிவ களுஆராச்சி திரு. டி. செந்தில்நாதன் செல்வி. என்.டி.எதிரசிங்க செல்வி.யு.எம்.வீரசேன திருமதி. ஜி.எம்.சத்தமங்கலா செல்வி.ஹிருனி சாமோதி		கூட்டாண்மை திட்ட தயாரிப்பு	NHRDC கலாநிதி சமந்த ரத்நாயக்க, PIM
செல்வி.ஏ.நயனா பிரியதர்சினி திரு.ஹயான் ஜீவந்த		மன அழுத்தம் மற்றும் கோபத்தை கட்டுப்படுத்த சக்திவாய்ந்த வெளிப்பாட்டு சிகிச்சையாக இசையபன்படுத்தல் மற்றும் இதன் மூலம் வழ்கையை மாற்றுவற்கான சவால்	CIPM

4.5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2020 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒரு தடவை கூடியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை சபைக்கு விதந்தரைத்தது.

- ❖ சட்டத்துக்கு அமைவாக திருத்தப்பட்ட நிறுவனத் திட்டத்தை தயாரித்து, அங்கீகாரத்துக்காக சபைக்கு சமர்ப்பித்தல்.
- ❖ திருத்தப்பட்ட பயிற்சி கொள்கை மற்றும் நிறுவன கட்டமைப்புக்கு சபையின் அங்கீகாரம் பெறுவதற்கான ஆலோசனை வழங்குதல்.
- ❖ 2019 ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீளாய்வு.
- ❖ 2020 மற்றும் 2021 வரவுசெலவுத் திட்ட மீளாய்வு.
- ❖ 2020 மற்றும் 2021 செயற்பாட்டுத் திட்ட மீளாய்வு
- ❖ 2020 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு
- ❖ சபை நிர்வாகத்துடன் தொடர்புடைய பல்வேறு முகாமைத்துவ தீர்மானங்கள்.

சபையின் பின்வரும் உறுப்பினர்கள் 2020 ஜூலை 16 தொடக்கம் 31 வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுவில் அடங்கியிருந்தனர்.

1. திருமதி. ஜே.டி.ஜி. சேனநாயக்க – (பிரதி பணிப்பாளர் - வெளிவாரி வள திணைக்களம்) – குழுவின் தவிசாளர்
2. திரு.ஆர்.எச். பியசேன – (சபை உறுப்பினர்) – குழு உறுப்பினர்
3. திருமதி. ஓ.பி.ஆர். தமயந்தி – (பிரதம உள்ளக கணக்காய்வாளர், அமைச்சு) அவதானிப்பாளர்
4. திருமதி.எம்.ஏ.எஸ். புஸ்பராணி – (அரசாங்க கணக்காய்வு பிரிவு) அவதானிப்பாளர்

5. 2020 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

5.1 தேசிய மனித வள அபிவிருத்தி திட்டத்தை (NHRDP) உருவாக்குதல்

1997 ஆண்டின் 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் 14(i) பிரிவுக்கு அமைய, தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி தொடர்பாக துறைசார் மனித வள அபிவிருத்தி அல்லது அது தொடர்பான, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பாவித்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழு நபர்களின் சமூகப் பாதுகாப்பை திட்டமிடுதல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பில் உரிமைகளை பேணிவருதல், தேசிய மனித வள கொள்கை தொடர்பாக தர்க்க ரீதியாக விளக்கமளித்தல் அடங்கலாக தொடர்புடைய அனைத்து துறைகளிலும் ஆலோசனை வழங்குதல் சபையின் கடமை மற்றும் பொறுப்பாகும்.

அரசின் புதிய நோக்குக்கு அமைய உள்ளடங்கும் விடயப் பரப்புக்கு அமைய, ''சுபீட்சத்தின் நோக்கு'' வகுக்கப்பட்ட தேசிய மனித வள அபிவிருத்தி கொள்கையை வகுத்தல் உடனடித் தேவையாகும். அதற்கமைய, ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய பத்து பிரதான கொள்கைகளுக்கான பொறுப்பான அனைத்து நிறுவனங்களினதும் அங்கீகாரத்துடன் தனது கொள்கையை தயாரிக்கும் செயற்பாட்டில் தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஈடுபட்டுள்ளது.

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் இலக்கு/குறிக்கோள்

தொழில்வாய்ப்பு

1. இலங்கையிலுள்ள அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு முழுமையான, பயனுள்ள மற்றும் சுதந்திரமாக தெரிவு செய்யும் தொழில் பெறுதலை மேம்படுத்துதல்.
2. தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள சனத்தொகையை குறைப்பதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்ததல்.
3. பேதங்கள் இன்றி அனைத்து ஊழியர்களுக்கும் இயன்றளவு உயர்ந்த பட்ச தொழில்வாய்ப்புகளை வழங்குதல்.

கல்வி மற்றும் பயிற்சி

1. உயர் திறமையுள்ள, உலகளாவிய ரீதியான போட்டித்தன்மையான, பல் திறன் மற்றும் வினைத்திறனான ஊழியப் படையை அபிவிருத்தி செய்தல்.
2. ஊழலற்ற, ஆன்மீக மேம்பாடு, சுற்றாடல் நேயம் மற்றும் ஒழுக்கநெறி மிக்க சமூகத்தை உருவாக்குதல்.
3. பாதிப்பு ஏற்படுத்தும் போதைப்பொருளில் இருந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதுகாப்பதற்காக உரிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பொறிமுறையை உறுதி செய்தல்.

மக்கள் - மைய பொருளாதாரம்

1. சமகால மற்றும் எதிர்கால தலைமுறையின் நலனுக்காக பொருளாதார அபிவிருத்தியின் முழுமையான அணுகுமுறையை உருவாக்குதல்.
2. பொருளாதார கொள்கைகளை விரைவாக அமுலாக்குவதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

சமூக பாதுகாப்பு மற்றும் உரித்துக்கள்

1. பெண்கள், சிறுவர்கள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பின்தங்கிய குழுக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் விருப்புகளை பாதுகாத்தல்.
2. இணைய குற்றங்களிலிருந்து பிரஜைகளைப் பாதுகாத்தல்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

1. தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட சமூகத்தை நோக்கி இலங்கையின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல்
2. பாதிக்ககூடிய மற்றும் எல்லை சமூகங்களுக்கான இலத்திரணியல் சேவை வழங்குவதனை உறுதிப்படுத்தல்.
3. அதிக உற்பத்திதிறனுக்கான அறிவுசார் சொத்துரிமைகளை புதுமை மற்றும் பயன்படுத்துவதற்கான கலாச்சாரத்தை உருவாக்குதல்.

தேசிய மனித வள அபிவிருத்தி திட்டத்தின் (NHRDP) உத்தேச ஐந்து தூண்கள்


1. தொழில்வாய்ப்பு
2. கல்வி மற்றும் பயிற்சி
3. மக்கள் மைய பொருளாதாரம்
4. சமூக பாதுகாப்பு மற்றும் உரிமைகள்
5. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

தொடர்புடைய துறைகளின் நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு மற்றும் செயற்குழு தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் ஊடாக மனித வள கொள்கை தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அந்த கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் மனித வள அபிவிருத்தி கொள்கை தேசிய மட்டத்திலும், துணை தேசிய மட்டத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் கொள்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மனித வள கொள்கைத் திட்டம் வரைபு

2019 இந்த கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, தேசிய மனித வள அபிவிருத்தி சபை NHRDC சட்டத்தின் கீழ்வரும் நம்பகமான துறைகள், நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDGs), NHR & E கொள்கையின் ஐந்து தூண்கள் மற்றும் "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கைப் பிரகடனத்தின் ஒன்பது தூண்களாக கருதப்படுகின்றன.

கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் நிலவும் சுகாதார வரையறைகள் காரணமாக நிபுணத்துவ குழுக்களை பௌதீக ரீதியில் ஒன்று சேர்ப்பதில் இடையூறு நிலவியது.



5.2 இலங்கை ஊழியர்களுக்கு கொவிட் - 19 ஏற்படுத்தி துறைசார் அழுத்தங்கள் தொடர்பான கணக்கெடுப்பு

2019 டிசம்பர் மாதம் சீனாவில் உருவான கொவிட் - 19 தொற்றுநோயின் திடீர் பரவல் மனிதர்களின் அனைத்து விதமான பொருளாதார மற்றும் நாளாந்த செயற்பாடுகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அது தொடர்ந்தும் தென் மற்றும் வட அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவில் இயங்குநிலையில் உள்ளது. நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கா தடுப்பு முறைகளை நாடுகள் விரைவாக மேற்கொண்டு வருகின்றன. கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசு வெற்றி பெற்றிருந்த போதிலும், அதயால் ஏற்பட்ட பாதிப்புகள் அளவிட முடியாததாகும். நூட்டின் உழைப்பாளர் சந்தைக்கு கொவிட் - 19 தாக்கத்தை அடையாளம் காணும் நோக்கத்துடன், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழிற்துறை, நிர்மாண கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள், ஆடைத் தொழிற்துறை, வழங்கல், விமான சேவைகள் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் கூருணர்வு மிக்க துறைகள் தொடர்பில் நிகழ்நிலை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. துணை அம்சங்கள், சட்ட ரீதியான தன்மை, கல்வி மற்றும் நிதிநிலையுடனான தகவல் தொழில்நுட்பம்.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை மூலங்கள் இரண்டிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அனைத்து துறைகளிலும் ஆரம்ப தரவு சேகரிப்பதற்காக எட்டு சிறிய கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டது. எழுமாறுகளை தெரிவுசெய்வதற்காக இலகுவான சாத்தியங்கள் அல்லாத எழுமாற்று விதிகள் பாவிக்கப்பட்டன. துறைகளுடன் தொடர்புடைய இலத்திரனியல் வினாக்கொத்து மின்னஞ்சல் மற்றும் ஏனைய நிகழ்நிலை அரங்குகள் ஊடாக தொழில் வழங்குனர்கள் மற்றும் விஷேடமான நிறுவனங்களுக்காக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டது. 206 தொழில் வழங்குனர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட துறைசார் நிபுணர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன. ஆய்வு காலத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக வரையறுக்கப்பட்ட எழுமாறுகள் தெரிவு செய்யப்பட்டன.

துறைகள்	மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பு (%)	நேரடி / மறைமுக தொழில் வாய்ப்புகள் 2018/2019	தாக்கம் (நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் கணிப்பீடுகள் ஊகிக்கப்பட்டுள்ளன.)
நிர்மாணம்	8	684,970	60% கம்பனிகள்
சுற்றுலா	4.3	600,000	41% - 60% ஊழியர்கள்
வழங்கல்	2.5	40,000 - 50,000	85% கம்பனிகள்
வேளிநாட்டு வேலைவாய்ப்பு	8	1,500,000	30,000-100,000 ஊழியர்கள்
புடவை மற்றும் ஆடைகள்	7.5	1,200,000	35% ஊழியர்கள்
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்	52	3,000,000	85% of SMEs

மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பு மற்றும் தொழில் வாய்ப்புகள்

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தின் ஊழியப் படை கணக்கெடுப்பு அறிக்கை, மத்திய வங்கி ஆண்டறிக்கை (2019) மற்றும் NHRDC கணக்கெடுப்பு (2020).

6 மில்லியனுக்கு கூடுதலானோர் இந்த துறைகளில் பணியாற்றுகின்றனர். அது ஒட்டுமொத்த ஊழியப் படையில் 75% விடவும் அதிகமானதாகும். தெரிவு செய்யப்பட்ட துறைகள் மொத்த தேசிய உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வானதாகும்.

தீவிர் தொற்றுநோய் காரணமாக அனைத்து துறைகளிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கணக்கெடுப்பு பெறுபேறுகள் மூலம் தெரியவருகிறது. கணக்கெடுப்பின் கண்டறிதல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இந்த நிலை காரணமாக சுற்றுலாத் துறையில் தொழில்வாய்ப்புகள் 41% - 60% இழக்கப்படும் என சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை நிபுணர்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களில் பெரும்பாலானோர் (71%) தெரிவித்துள்ளனர். எனவே சுற்றுலாத் துறையில் தொழிலை இழந்த 58% ஊழியர்களுக்காக மீண்டும் பயிற்சி வழங்கும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

கொவிட் - 19 காலப் பகுதியில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு துறையின் மதிப்பீடு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் 1 மில்லியன் தொடக்கம் 1.5 மில்லியன் அளவானோர் இருப்பதாக ஆய்வு பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த தொற்று நோய் காரணமாக 30,420 தொடக்கம் 100,000 வரையான தொழில் வாய்ப்புகள் இழக்கப்படலாம் எனவும் தெரிய வந்துள்ளது. அத்துடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது புலம்பெயர் தொழிலாளர்களால் ஈட்டப்படும் தனிநபர் வருமானம் 2020 ஆண்டின் முற்பகுதியில் 30% தொடக்கம் 40% வரை குறைவடைந்துள்ளதுடன், வெளிநாட்டு தொழிலில் கொவிட் - 19 நோய் எற்படுத்திய தாக்கம் 2 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடுதலான காலம் நிலவலாம்.

சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி துறையில் 23% சிறிய மற்றும் நடுத்தரமான தொழில்முயற்சியாளர்கள் மட்டுமே 6 மாதங்களுக்கு குறைவான காலத்தில் இயல்பு நிலைக்கு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலானோர் (77%) இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு 6 மாதங்களுக்கு கூடதலான காலம் எடுக்கலாம்.

உறபத்தி செயற்பாடுகளில் இணைந்து கொள்ள முடியாத தொழிலாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான எந்தவொரு ஒழுங்குவிதிகளும் அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்படவில்லை என ஆடைத் தொழிற்சாலைத் துறையின் 64% மாதிரிகளின் மூலம் தெரியவந்தது.

குறைந்தளவு திறன்பெற்ற தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு உயர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதுடன் 70.5% ஆன பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்காக சம்பள குறைப்பு திட்டம் பின்பற்றப்படுவதாக வழங்கல் சேவைத் துறையில் 38% தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது தகவல் தொழில்நுட்ப பிரிவில் குறிப்பிடத்தக்க அளவான பாதகமான தாக்கம் எற்படவில்லை. இருந்த போதிலும், பெறுகை கட்டளைகள் பிற்போடப்படுதல் தாம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும் என 90.5% நிறுவனங்களால் பதில் வழங்கப்பட்டுள்ளது. பௌதீக சந்திப்புக்கு மாற்றாக நிகழ்நிலை கூட்டங்களை பதிலீடு செய்யுமாறு அனைத்து தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நிகழ்நிலை கணக்கெடுப்பை அடிப்படையாக கொண்டு பின்வரும் விதந்துரைகளை NHRDC முன்வைத்துள்ளது.

அரசாங்கத்துக்கான விதந்துரைகள்

கொவிட் - 19 இன் பாதகமான தாக்கத்திலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக அரசு பல்வேறு உதவிகள் மற்றும் நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளது. துறைகளை மீள இயக்கும் செயன்முறையை வேகப்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய ஏனைய பல்வேறு விஷேட தந்திரோபாயங்கள் உள்ளதுடன், அதன் மூலம் இறுதியில் ஊழியர்களுக்கு நன்மை கிடைக்கும். ஆரம்பிக்கக்கூடில பல்வேறு விஷேட துறைகள் கீழே காட்டப்படுகின்றன.

தொழில் வாய்ப்புகள்

- தோற்று நோய் நிலை மற்றும் அதற்கு அப்பால் போட்டித்தன்மையான சுற்றுலாத்துறை மாதிரிகளை (உதா : ஆரோக்கிய சுற்றுலா) அறிமுகம் செய்தல்.
- புடவைகள் மற்றும் மூலப்பொருள் உற்பத்தியை நாட்டில் மேம்படுத்துதல்.
- வேலை செய்யும் மாதிரிகளில் புதிய முறைகளை அறிமுகம் செய்தல், வீட்டு ஆடை உற்பத்தி எண்ணக்கரு போன்ற வீட்டிலிருந்து பணியாற்றுதல், முறையான மற்றும் இலகுவாக கண்காணிக்கக்கூடிய இலத்திரனியல் வர்த்தக மேடையை விருத்தி செய்தல்.

சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல்

- தேசிய பதில் வினையாற்றல் திட்டத்துக்கு (NRP) இலங்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுதல் மற்றும் NRP இல் உரிய குறுங்கால மற்றும் நீண்ட கால செயன்முறைகளை தொடர்புடைய தரப்பினருடன் இணைந்து அறிமுகம் செய்யலாம்.

நிறுவன மற்றும் நிர்வாகம்

- அரசு பல்தரப்பு செயலணியை நிறுவலாம். அரச சார்பற்ற பங்குதாரர்கள் அடங்கலாக வருமான ஈட்டலை அதிகரித்தல் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளை பன்முகப்படுத்தவதற்கான நீண்டகால திட்டத்தை தயாரிப்பதற்காக அரசு மற்றும் ஒட்டு மொத்த சமூக தரப்பினரையும் பாவிக்கலாம்.
- பலமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி தகவல் வலையமைப்பை நிறுவுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி நிலையங்கள் / ஆலோசனை நிலையங்களை மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் நிறுவுதல்.

நிதி

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக தொழில்முயற்சி மூலதன நிதியத்தை அறிமுகம் செய்தல்.
- ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் இருப்புக்கான வசதிகளை வழங்குவதற்காக நிர்மாண தொழிற்துறையில் பொருத்தமான ஒழுங்குவிதிகளை தளர்த்துதல். வுங்கி செயற்பாடுகளில் சலுகை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இதில் அடங்கும்.
- சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் சுயதொழிலுக்கான வங்கி கடன் திட்டத்தை அறிமுகம் செய்தல் மற்றும் புலம்பெயர் பெற்றுள்ள கடன்களுக்கான நிலுவைத் தவணைக் கொடுப்பனவுகளை மீள செலுத்துவதற்கு சலகை வழங்குதல்.

தொழில்நுட்பம்

- தேவையான கைத்தொழில் / சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியில் மீள பயிற்றுவித்தல் மற்றும் மீள ஈடுபடுத்துவதற்காக பாதிக்கப்பட்ட ஊழியர்களின் தொழிலற்றோர் தரவுத் தளத்தை மீள உருவாக்குதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தினால் (**ICTA)** ஏற்கனவே காணொளி மாநாட்டு செயலி **(meet.gov.lk)** உருவாக்கப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் பிரதானமாக **Zoom** மற்றும் **Microsoft Teams** போன்ற கட்டணம் செலுத்தும் செயலிகளை பாவிக்கின்றன. அமெரிக்க டொலர் வெளியே செல்வதனை குறைப்பதற்காக அரசின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள செயலியை இலவசசமாக பாவித்து காணொளி மாநாடுகளில் பங்குபற்றுவதற்கு மக்களை ஊக்குவித்தல் வேண்டும்.

5.3 உள்நாட்டு தொழிற்துறையின் தற்போதைய நிலை மற்றும் அது சார்ந்த மனித வள பிரச்சினைகள்

இலங்கையின் பெரும்பாலான கைத்தொழில்கள் அழிந்து போகும் நிலையில், புதிய அரசின் கவனம் இந்த திசையில் திரும்பியுள்ளது. அதற்கமைய, இராஜாங்க அமைச்சுக்கள் உருவாக்கப்படும் போது இலங்கையின் உள்நாட்டு கைத்தொழில்கள் மற்றும் குறைவாக கவனம் செலுத்தப்படும் துறைகள் தொடர்பாக கூடுதலாக கவனம் செலுத்தி, புதிய இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்தொழில் துறைகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பு வழங்கும் உயர் ஆற்றல் உள்ளது. அதற்கமைய கைத்தொழில் துறைகளின் தற்போதைய நிலையை அடையாளம் காணுதல் மற்றும் நிலவும் மனித வள பிரச்சினைகளை அதன் மூலம் அடையாளம் கண்டு அதற்கு தீர்வு காண்பதன் மூலம் இந்த கைத்தொழில்கள் மற்றும் துறைகளின் முழுமையான பங்களிப்பை பொருளாதாரத்துக்கு பெறும் இயலுமை உள்ளது.

5.3.1 பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழில்

இலங்கையின் பெரும்பாலான கைவினைப் பொருள் கைத்தொழிலின் இல்லமாக கருதப்படுகிறது. அவற்றில் தற்போதைய அரசின் பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சிநிரலில் பற்றிக் கைத்தொழிலுக்கு கணிசமான இடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பற்றிக் கைத்தொழில் பெரும்பாலும் மனைசார் அல்லது சமூகம் சார்ந்த கைத்தொழிலாக உள்ளது. அது உள்நாட்டு பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் மரபுரிமை தொடர்பில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்த கைத்தொழில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தனித்துவமான இலங்கை புடவை கலையாக வளர்ச்சி அடைந்துள்ளது. அது தனிநபர் படைப்பாக்க திறன்கள், படைப்பாற்றல் மற்றும் பேண்தகு தன்மையுடன் இணைந்ததாக காணப்படுகிறது. பெண்கள் மற்றும் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுதல், குடும்ப வருமானத்தை ஈட்டுதல் மற்றும் கிராமிய சமூகத்திலிருந்து வறுமையை ஒழிக்கும் ஆற்றல் காரணமாக பற்றிக் கைத்தொழில் துறை பொருளாதாரத்தின் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

‘‘நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ கொள்கைக்கு அமைய கிராமிய பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க அளவான பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்பை வழங்கும் இயலுமையுள்ள கைத்தொழிலாக கைத்தறி கைத்தொழில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த கைத்தொழிலில் அரச உற்பத்தி நிலையங்கள் மாகாண சபைகளின் விடயப் பரப்புக்கு உரியதாக உள்ளன. புடவை கைத்தொழில் திணைக்களத்தின் ஊடாக கொள்கை வகுத்தல், பயிற்சி, வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தலுக்கு மத்திய அரசு இணைந்து செயற்படுகிறது.

இலங்கையின் கைத்தறி கைத்தொழில் கூடுதலான உழைப்பு மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட கைத்தொழிலாக அடையாளம் காணப்படுகிறது. இந்த துறை பல ஆண்டுகளாக வீழ்ச்சி அடைந்திருந்த போதிலும், அதிலிருந்து குறிப்பிடத்தக்க அளவான தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் சாத்தியம் மற்றும் ஏற்றுமதி ஊடாக வருமானம் ஈட்டும் வாய்ப்புள்ள கைத்தொழிலாகும். இந்த கைத்தொழில் கிராமப்புறங்களில் குடிசைக் கைத்தொழிலாக இயங்குவதுடன், பெரும்பாலான நெசவாளர்கள் தமது வாழ்க்கைத் தொழிலாக இதனை மேற்கொள்வதுடன், பகுதியளவில் விவசாயம் மற்றும் வீட்டுப் பணியில் ஈடுபடுகின்றனர்.

தற்போது தேசிய கைப்பணிச் சபையின் (என்.சி.சி) கீழ் 2041 பற்றிக் கலைஞர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆவர்களில் பெரும்பாலானோர் கண்டி மாவட்டத்தில் (உரு 1) உள்ளனர். பற்றிக் கலைஞர்கள் தொடர்பான மேற்குறித்த புள்ளிவிபரம் இருந்த போதிலும், இந்த தொழிலுடன் தொடர்புடைய ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான துல்லியமான தரவுகள் எதுவுமில்லை.

தேசிய கைப்பணி சபையின் கீழ் 3171 புடவை கலைஞர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். நுனுடீ (2020) கைத்தொழில் சாத்திய வள ஆய்வுக்கு அமைய 15,000 பேர் இந்த கைத்தொழிலில் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இருப்பினும் இந்த தொழிலுடன் தொடர்புடைய ஊழியர்களின்

எண்ணிக்கை தொடர்பான துல்லியமான தரவுகள் எதுவுமில்லை. பற்றிக் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கான எச்எஸ் கோட் (HS Code) இல்லாதிருத்தல் பற்றிக் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது முக்கியமான விடயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, புடவை மற்றும் புடவை சார் பண்டங்களின் வகுதியில் பற்றிக் மற்றும் கைத்தறி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதற்கமைய, 372.38 மில்லியன் அமெரிக்க டொலர் புடவை மற்றும் புடவை ஏற்றுமதியின் பெறுமதியாகும். அது 2019 ஆண்டின் ஏற்றுமதியில் 2.35மூ ஆகும். இந்த இரண்டு கைத்தொழில்களும் சந்தையில் தமது செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழிலுக்கு உரிய பயிற்சிகளை வழங்கும் சில அரச நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் சில கீழே குறிப்பிடப்படுகின்றன.

- ❖ தேசிய கைப்பணி சபை
- ❖ தேசிய வடிவமைப்பு நிலையம்
- ❖ இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் (SLITA)
- ❖ புடவை கைத்தொழில் திணைக்களம்

கைத்தொழிலின் திறன் விருத்தி தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது, தேவையான நிபுணத்துவ அறிவை வழங்குவதற்கான சில நிலையங்கள் மட்டுமே இருப்பது தெரிய வருகிறது. இந்த பயிற்சிகளில் பெரும்பாலானவற்றுக்கு ஏஞ சான்றிதழ் வழங்கப்படுவதில்லை என்பதுடன், பொருத்தமான பொறிமுறை மூலம் மேற்பார்வை அல்லது முறைமைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதில்லை.

பிரதான மனித வள பிரச்சினை

- ❖ **வடிகமைப்பு தொடர்பான புதிய கருத்துக்கள் இன்மை.**

இற்றைக்கு பல தசாப்த்தங்களுக்கு முன்னர் இலங்கையில் இந்த கைத்தொழிலுக்கு அறிமுகப்படுத்திய வடிவமைப்புகளே இலங்கை பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழிலில் இன்றும் பாவிக்கப்படுகிறது. புதிய வடிவமைப்புக்களுடனான நவீன நுட்பங்கள் இல்லாதிருத்தல் இந்த கைத்தொழிலின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் பிரதான விடயமாகும். அது மட்டுமன்றி, பற்றிக் மற்றும் கைத்தறி உற்பத்திகளின் தரத்தை அடையாளம் காணுதல் மற்றும் சான்றுபடுத்தவதற்கான பொருத்தமான முறைமை இல்லாதிருத்தல் காரணமாகவே இந்த கைத்தொழில் உற்பத்தியாளர்களை புத்தாக்கம் மிக்க உற்பத்திகளை மேற்கொள்ள தூண்டப்படுவதில்லை. உதாரணமாக, COVID-19 நிலைமையில் பற்றிக் உற்பத்தியாளர்களால் மருத்துவ குணமுள்ள முகக்ககவசங்கள் தயாரிக்கப்பட்டன. இருப்பினும், தமது உற்பத்திகளின் தரத்தை அளவிடுதல் மற்றும் அவற்றை சான்றுபடுத்துவதற்கான முறைமை இல்லையென உற்பத்தியாளர்கள்

தெரிவிக்கின்றனர். இந்த கைத்தொழிலில் நிலவும் இவ்வாறான பிரச்சினைகள் உற்பத்தியாளர்களின் புத்தாக்க முயற்சிகளை பலவீனப்படுத்தகின்றன.

திறன் மிக்க மனித வளம் கைத்தொழிலின் வெற்றியை தீர்மானிக்கும் ஒரு முக்கியமான அங்கமாகும். குறைவான சம்பளத்தை பெறும் நிலை காரணமாக இளம் தலைமுறையினர் இந்த கைத்தொழிலுக்கு ஈர்க்கப்படுவதில்லை. மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைய இந்த கைத்தொழிலுக்கு தொழில்நுட்பம் பெரும் பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்பதுடன், உயர் நிபுணத்துவ அறிவு பெற்ற உழைப்பாளர் படைக்கான பயிற்சி இந்த வேளையில் மிகவும் முக்கியமானதாகும். பெரும்பாலான அரச நிறுவனங்கள் பல்வேறு பயிற்சிகளை நடத்துகின்றன. இருந்த போதிலும், அந்த பயிற்சிகள் பொருத்தமான பொறிமுறை ஊடாக உரிய முறையில் ஒழுங்குபடுத்தப்படுவதாக தெரியவில்லை. இள வயதினர் ஈர்க்கப்படாமை மற்றும் இந்த கைத்தொழிலில் அவர்களை வைத்திருப்பதில் நிலவும் சிரமமும் அதற்கான ஒரு காரணமாக இருக்கலாம்.

நிதி தொடர்பான அறிவு இன்மை


பற்றிக் மற்றும் கைத்தறி கைத்தொழில் துறை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும்பாலும் சேவையாற்றும் கிராமிய கைத்தொழில் துறையாகும். நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவின்மை காரணமாக அவற்றில் பெரும்பாலான குடும்பங்கள் குறைந்த வருமானம் பெறும் நிலையிலிருந்து மீள்வதற்காக போராடுகின்றன. அது மட்டுமன்றி, தடைத்தரகர்கள் தமக்கான இலாபத்தை பெற்றுக் கொள்வதனால் உற்பத்தியாளர்களுக்கு போதுமானளவு வருமானத்தை ஈட்டும் நிலையை தவறவிடும் அதே வேளை நுகர்வோரும் அந்த உற்பத்திகளுக்காக கூடுதலான விலையைச் செலுத்துகின்றனர்.

5.3.2 பித்தளை கைத்தொழில்

ஒரு பித்தளைப் பொருளாவது இருக்காத வீடுகள் இலங்கையில் இல்லையென நம்பக்கூடிய அளவுக்கு பித்தளை கைத்தொழில் இலங்கை குடும்பங்களுடன் நெருக்கமான கைத்தொழிலாகும். அதற்கு மேலதிகமாக பளபளப்பான பொன்நிற பித்தளை விளக்கை ஏற்றுதல் அதிஸ்டத்தை ஏற்படுத்தும் என இலங்கையர்கள் நம்புவதுடன், அனைத்து விஷேட நிகழ்வுகள், தேசிய விழாக்கள் மற்றும் அனைத்து விழாக்களின் ஆரம்பத்திலும் விளக்கேற்றல் இடம்பெறுகிறது. ஏனவே இலங்கையின் பித்தளை உற்பத்திக் கைத்தொழில் நாட்டுக்குரிய கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக இருக்கிறது என சொல்லலாம்.

தற்போது தேசிய கைப்பணிச் சபை (என்.சி.சி) பித்தளை கலைஞர்களை தனியாக பதிவு செய்வதில்லை. தற்போது தேசிய கைப்பணிச் சபை (என்.சி.சி) உலோகத்தை அடிப்படையாக கொண்ட அனைத்து கலைஞர்களையும் ஒரே வகுதியாக கருதுகிறது. அதற்கமைய, உலோகத்தை அடிப்படையாக கொண்ட 217 கலைஞர்கள் என்.சி.சியில் பதிவு செய்துள்ளனர். அவர்களில்

பெரும்பாலானோர் கண்டி மாவட்டத்தில் (114) இருக்கின்றனர். அம்பாந்தோட்டை, மொனராகல, அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட உலோக உற்பத்திக் கலைஞர்கள் பதிவு செய்யப்படாமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஒரு 1)



மூலம் தேசிய கைப்பணிச் சபை (என்.சி.சி) – 2020

இலங்கை பித்தளைக் கைத்தொழில் பிரதானமாக மத்திய மாகாணம் முழுவதிலும் பரவியுள்ளதுடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள தனியான கிராமங்களிலும் பரவியுள்ளது. இந்த கைத்தொழில் கண்டி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில், விஷேடமாக பிலிமத்தலாவ பிரதேசத்தை மையமாகக் கொண்டுள்ளது. பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்காக 1965 ஆண்டில் இருந்த அரசினால் கண்டி நகருக்கு அருகில் ‘‘கலாபுரய’’ எனும் பெயரிலான விஷேட கிராமம் உருவாக்கப்பட்டது. பின்னர் பெரும்பாலான பித்தளை கலைஞர்கள் அந்த கிராமத்துக்கு புலம்பெயர்ந்தார்கள்.

பித்தளைக் கைத்தொழில் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவான நிறுவனங்களே உள்ளன. தேசிய கைப்பணிச் சபை, ஏவுயு மற்றும் யேஜவுயு போன்ற முன்னணி அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் பித்தளை உபகரணங்கள் தொடர்பான எந்தவொரு பயிற்சியும் வழங்கப்படுவதில்லை என்பது ஆய்வின் மூலம் தெரியவந்தது. 2018 ஆண்டில் தேசிய வடிவமைப்பு நிலையம் பித்தளை உபகரணங்கள் தொடர்பான 2 பயிற்சிகளை நடத்தியுள்ளது. அந்த பயிற்சிகள் மூலம் 47 கலைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அந்த அனைத்து பயிற்சிகளும் 1 தொடக்கம் 3 நாட்களைக் கொண்ட குறுங்கால பயிற்சிகளாகும் என்பதுடன், பயிற்சி பெற்ற எவருக்கும் ஏஞ தர சான்றிதழ் வழங்கப்படவில்லை.

பிரதான மனித வள பிரச்சினைகள்

பித்தளை கைத்தொழிலின் மனித வளம் தொடர்பான பல பிரச்சினைகள் உள்ளன என்பதனால் தற்போதைய நிலை மிகவும் பாதகமான இருப்பது தெரியவருகிறது. அவற்றில் சில பிரச்சினைகளை பின்வருமாறு தெளிவுபடத்தலாம்.

❖ **இளம் தலைமுறை கைத்தொழிலுக்கு ஈர்க்கப்படாமை**

பல தசாப்தங்களாக பாவிக்கப்பட்டுள்ள பித்தளை உற்பத்திக் கைத்தொழில் தொடர்பான கற்கைகளை பின்பற்றுதல் மற்றும் நுழைவதற்கு இளம் தலைமுறையினர் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வாறான காரணிகளால் இந்த பாரம்பரிய கைத்தொழிலில் ஈடுபடும் சமூகம் முறையாக குறைவடைதல். இந்த கைத்தொழிலின் அழிவு தொடர்பாக பாரதூரமான பிரச்சினை ஏற்படுத்துகிறது. நவீன உற்பத்தி கைத்தொழில் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளதுடன், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கூட நவீன தொழிநுட்பத்துக்கு விரைவாக இசைவாக்கம் அடைந்துள்ள போதிலும், பாரம்பரிய பித்தளை கைத்தொழில் இன்றும் காலங்கடந்த தொழில்நுட்பத்துடன் தப்பி பிழைத்திருக்கிறது. அதன் மூலம் அந்த கைத்தொழில் குறைவான வினைத்திறன் மற்றும் குறைவான போட்டியை உருவாக்குகிறது. அது இளம் தலைமுறையினர் மத்தியில் ஈர்ப்பை குறைப்பதற்கு காரணமாக உள்ளது. எனவே பாரம்பரிய பித்தளை உற்பத்தி கைத்தொழிலுக்கு தேவையான தொழில்நுட்பத்தை மதிப்பீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தி, ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், அதன் மூலம் அந்த கைத்தொழில் வினைத்திறன் மற்றும் போட்டியை அதிகரிப்பதற்கான தொழில்நுட்ட தேவைகளை அடையாளம் காணவேண்டியுள்ளது.
மூலப்பொருட்களை பெறுவதில் நிலவும் சிரமம் இந்த கைத்தொழில் முகங்கொடுக்கும் பிறிதொரு முக்கிய பிரச்சினையாகும். இந்த பிரச்சினையும் புதிய தலைமுறையினர் கைத்தொழில் துறையில் நுழைவதற்கு தடையாக உள்ள காரணியாகும்.

❖ **ஊழியர்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை**

பித்தளை தொழிலாளர்கள் சுவாச பிரச்சினை (மூச்செடுக்கும் பிரச்சினை) அதிகரிக்கும் அச்சுறுத்தல் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளதுடன், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அல்லது கைத்தொழில் கலைஞர்களுக்கு சுகாதார நன்மைகளை வழங்குவதற்கான முறைமைகள் எதுவுமில்லை. எனவே, கைத்தொழிலை தொடர்ச்சியாக நடத்துவதற்காக சுகாதார உபத்திரவங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

❖ **பித்தளை உபகரணங்கள் தொடர்பான தொழிற்பயிற்சி இன்மை**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவனம் பித்தளை கைத்தொழில் தொடர்பான திறன்களை விருத்தி செய்தல் தொடர்பாக குறைவான அக்கறை காட்டப்படுவதுடன், முன்னணி தொழிற்பயிற்சி நிறுவனமான VTA மற்றும் NAITA போன்ற

நிறுவனங்கள் பித்தளை பாண்டங்கள் தொடர்பான பயிற்சிகளை நடத்துவதில்லை. அது மட்டுமன்றி, தேசிய கைப்பணிச் சபை மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம் ஆகியவற்றின் மூலம் தற்போது நடத்தப்படும் பயிற்சிகளுக்கும் NVQ சான்றிதழ் வழங்கப்படுவதில்லை.

5.3.3 சமுத்திர, நன்நீர் மற்றும் நீரியல் உயிரின வளர்ப்பு, இறால் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு

இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் மீன்பிடித் துறை பிரதான பங்கை ஆற்றுகிறது. விலங்குப் புரத தேவை மீன்களின் உற்பத்திக்கு முக்கியமான சாதகமான நிலையாகும் என்பதுடன், 2018 ஆண்டில் இந்த துறை ஈட்டிய தேசிய ஏற்றுமதியின் பங்களிப்பு 2.5மூ அளவானதாகும். 2018 ஆண்டில் மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதி 28771 மெற்ரிக் தொன்களாகும். நிறைவுப் பொருள் உற்பத்திகளை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தலுக்கான இயலுமை மற்றும் இறக்குமதி பொருட்களுக்கான மாற்று பொருட்களாக இருப்பதன் மூலம் இந்த துறையின் பங்களிப்பு மட்டத்தை அதிகரிப்பதற்கான குறிப்பிடத்தக்க ஆற்றல் உள்ளது.

பருவகால கிராம குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு 1979 ஆண்டில் மீன்பிடி அமைச்சின் உள்நாட்டு மீன்பிடி பிரிவினால் நாட்டின் உலர் வலயத்தில் உள்ள 23 குளங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 1979 ஆண்டிலிருந்து திலாப்பியா மற்றும் காப் மீன் குஞ்சுகளை பாவித்து மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1980 தசாப்தத்தின் முற்பகுதியில் சிறிய அளவான பல தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சில பல்தேசிய கம்பனிகளால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கு பதிலாக வரிவிலக்கு பெற்ற உள்ளீட்டு நிறுவனங்களும் அடங்கலாக கரையொர வாவிகளில் பெரிய புலி இறால்கள் (பெனியஸ் மொனோடோன்) வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1990 தசாப்த்தத்தின் பிற்பகுதியில் பிளாஸ்ரிக் போடப்பட்ட கம்பி வலை கூடுகளில் இந்திய – பசுபிக் சதுப்பு நில நண்டுகள் (ஸ்கைலா செராட்டா) வளர்ப்பு வர்த்தக ரீதியில் கரையோர களப்புகளில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் அலங்கார மீன் கைத்தொழிலுக்கு நீண்ட வரலாறு உள்ளது. அது நகரங்களில் சிறிய அளவான விற்பனை நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1930 தசாப்தத்தின் முற்பகுதியில் இலங்கையின் சிறிய அளவான இறக்குமதியாளர்கள் மற்றும் அலங்கார மீன் உற்பத்தியாளர்கள் சிலர் இருந்தார்கள். 1952 ஆண்டில் இலங்கையின் தலைநகரான கொழும்பில் வர்த்தக மீன் மாளிகை ஆரம்பிக்கப்பட்டது. இந்த கைத்தொழில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சில தொழில் முயற்சியாளர்களால் வர்த்தகமயப்படுத்தப்பட்டது. அது தற்போது பெரும்பாலானோர் இலாபம் மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்கும் மேம்பாட்ட கைத்தொழிலாக வளர்ச்சியடைந்துள்ளது. அலங்கார மீன் வளர்ப்பு பிரதானமாக சீமெந்து தொட்டிகளில் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையில் 2019 ஆண்டில் 181,880 மீன்பிடி குடும்பங்கள் சமுத்திர மீன்பிடி துறையில் ஈடுபட்டிருப்பதாக அறியவருகிறது. 2018 ஆண்டுடன் ஒப்பீடாக 2019 ஆண்டில் சமுத்திர மீன்பிடி

குடும்பங்களின் எண்ணிக்கையில் 1770 குறைவடைந்துள்ளது. அத்துடன், சமுத்திர மீன்பிடி குடும்பங்களில் பெரும்பாலானோர் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளதுடன், சிறிதளவான மீன்பிடி குடும்பங்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறையில் 56,250 குடும்பங்கள் பதிவாகியுள்ளன. 2017 ஆண்டின் மீன்பிடி குடும்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடாக 2018 ஆண்டில் உள்நாட்டு மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறையில் 2080 குடும்பங்கள் அதிகரித்துள்ளன. மேலும், கூடுதலான உள்நாட்டு மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு மீனவர்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பரவலடைந்துள்ளதுடன், இரண்டாவது மற்றும் மூன்றாவது கூடுதலான உள்நாட்டு மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறையில் முறையே பொலநறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இருப்பதாக தெரியவருகிறது. உள்நாட்டு மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறையில் குறைந்தளவானோர் முறையே யாழ்ப்பாணம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் இருப்பது தெரிய வருகிறது.

சமுத்திர மற்றும் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறையில் நேரடி மற்றும் மறைமுகமாக தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. அது 2019 ஆண்டுடன் ஒப்பீடாக 2018 ஆண்டில் 1000 த்தினால் அதிகரித்துள்ளது.

827 பதிவு செய்யப்பட்ட இறால் பண்ணைகள் இயங்குகின்றன. 49 பதிவு செய்யப்பட்ட இறால் இனப்பெருக்க நிலையங்களும் இயங்குகின்றன. இறால் பண்ணைகள் மற்றும் இனப்பெருக்க நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 4380 ஆகும். அத்துடன், 939 பதிவு செய்யப்பட்ட அலங்கார மீன் பண்ணைகள் இயங்குகின்றன. பதிவு செய்யப்பட்ட அலங்கார மீன் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை 4 ஆகும். தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அலங்கார மீன் பண்ணைகள் மற்றும் அலங்கார மீன் இனப்பெருக்க நிலையங்களில் 4900 ஊழியர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

2019 ஆண்டில் சமுத்திர துறையின் வருடாந்த மீன் உற்பத்தி 415,490 மெற்ரிக் தொன்கள் ஆகும். 2018 ஆண்டில் சமுத்திர பிரிவின் வருடாந்த மீன் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2019 ஆண்டின் மீன் உற்பத்தி 23,880 மெற்ரிக் தொன்களால் குறைவடைந்துள்ளது. அத்துடன், 2018 ஆண்டின் வருடாந்த மீன் உற்பத்தியின் உள்நாட்டு நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு துறை 87,690 மெற்ரிக் தொன்களாகும் என்பதுடன், 2017 ஆண்டின் நன்னீர் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 5,820 மெற்ரிக் தொன்களால் அதிகரித்துள்ளமை தெரிய வருகிறது. 2019 ஆண்டில் இறால் உற்பத்தி 6,400 மெற்ரிக் தொன்களாகும் என்பதுடன், 2018 ஆண்டில் இறால் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது இறால் உற்பத்தி 18,750 மெற்ரிக் தொன்களால் குறைவடைந்துள்ளதனை காணலாம்.

சமுத்திர மற்றும் நன்னீர் மீன் மற்றும் மீன்சார் உற்பத்தி ஆகிய இரண்டு பிரிவுகளினதும் ஏற்றுமதி 28,771 மெற்ரிக் தொன் அளவானதாகும் என்பதுடன், அது 2018 ஆண்டின் சமுத்திர மற்றும் நன்னீர் மீன் மற்றும் மீன்சார் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 773 மெற்ரிக் தொன்களால் அதிகரித்துள்ளது. 2019 ஆண்டில் இறால் ஏற்றுமதி பெறுமதி 3522 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன், அது 2018 ஆண்டின் இறால் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 37 மில்லியன் ரூபாவாகும். அத்துடன், 2019 ஆண்டில் அலங்கார மீன்கள் ஏற்றுமதி பெறுமதி 2913 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன், அது 2018 ஆண்டின் அலங்கார மீன் ஏற்றுமதி பெறுமதியுடன் ஒப்பிடும் பொது 287 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு நீரியல்வாழ் உயிரின வளர்ப்புக்கான பயிற்சிகள்

யுஞுனுயு நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் உள்நாட்டு நீரியல்வாழ் உயிரின வளர்ப்புக்கான 4 பயிற்சி நிலையங்கள் இயக்கப்படுகின்றன. உள்நாட்டு நீரியல்வாழ் உயிரின வளர்ப்புக்கான 4 பயிற்சி கொள்ளளவு 330 (தங்குமிட வசதி 100) ஆகும். கொண்டுள்ள கலாவெவ பயிற்சி நிலையம் மற்றும் உடவளவ, தம்புள்ள, இங்கினியாக்கல ஆகிய அனைத்து பயிற்சி நிலையங்களினதும் பயிற்சி கொள்ளளவு 25 ஆகும்.

மீன்பிடித் துறையினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மனித வள அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரச்சினைகள் :

உள்நாட்டு நீரியல்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்பான பிரச்சினைகள் :

1. நன்னீர் மீனவர்களின் சேமிப்பு குறைவடைதல்.
2. செலவை கட்டுப்படுத்துதல் தொடர்பான அறிவின்மை.

இறால் வளர்ப்பு தொடர்பான பிரச்சினைகள் :

1. வெண்புள்ளி நோய் காரணமாக பண்ணையாளர்கள் இறால் பண்ணைகளை கைவிடுதல்.
2. இறாலுக்கான உணவுகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதில் நிலவும் சிரமம்.
3. நோய் ஏற்பட்ட இறால்கள் காரணமாக களப்பு மீனவர்களின் வருமானம் குறைவடைதல். முறையற்ற இறால் பண்ணைகளிலிருந்து அகற்றப்படும் அசுத்த நீர் களப்புகளில் விடப்படுவதனால் இயற்கையான களப்பு சூழல் கட்டமைப்புகள் மாசடைதல் அதிகரிக்கிறது.

அலங்கார மீன் வளர்ப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள்

1. NAQDA விரிவாக்கல் அலுவலர்களால் வழங்கப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றாத அலங்கார மீன் வளர்ப்பு பண்ணையாளர்களின் செயற்பாடுகள் காரணமாக தரமான அலங்கார மீன் வகைகள் கிடைக்காமை காரணமாக அலங்கார மீன்

ஏற்றுமதி வாய்ப்புகள் இழக்கப்படுகின்றன. அதன் காரணமாக அவர்கள் அந்த அலங்கார மீன்களை உள்நாட்டு சந்தையில் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

2. அலங்கார மீன்களுக்கான உணவு மற்றும் மருந்துகளை பெறுவதற்கான பொருத்தமான முறைமை இல்லாதிருத்தல் அலங்கார மீன் உற்பத்தி கைத்தொழிலை நடத்துவதில் உள்ள பிரச்சினையாக உள்ளது.
3. பொருத்தமான பயிற்சி மற்றும் அறிவின்றி அலங்கார மீன் வளர்ப்பு துறையில் நுழையும் பண்ணையாளர்கள் மிகவும் குறுகிய காலத்தில் துறையை விட்டு விலகிச் செல்லுதல்.
4. அலங்கார மீன்களை கொள்வனவு செய்யும் உள்நாட்டு கொள்வனவாளர்கள் அந்த மீன்களை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யாமை. அந்த மீன்களை விற்பனை செய்வதற்கான தொடர்ச்சியான சந்தை இல்லாதிருத்தல்.

5.3.4 நெற்பயிர்ச் செய்கை

விவசாயிகளால் நெல் பயிரிடப்படும் நிலம் நெல் வயல் அல்லது வயல் எனப்படுகிறது. இலங்கையின் பிரதான உணவு அரிசியாகும். இலங்கையின் நெற்பயிர்ச் செய்கை கமத்தொழில் துறையில் மிகவும் முக்கியமானதாகும். பண்டைய மற்றும் பாரம்பரிய விவசாயிகள் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தனர். புராதன இலங்கை நெல் ஏற்றுமதியில் முன்னணியில் இருந்த நாடாகும். இலங்கையில் மன்னர்கள் தமது ஆட்சிக்காலத்தில் பாரிய நீர்ப்பாசன குளங்களை அமைத்ததன் மூலம் விவசாயத்தக்கு பெரும் பங்களிப்பை வழங்கினார்கள். மஹா பராக்கிரமபாகு மன்னரின் காலத்தில் இலங்கையிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான புகழ்பூத்த வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கையின் நெற்பயிர்ச் செய்கைக்கு தற்போதும் விஷேடமான இடம் கிடைக்கிறது. குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் தகவல்களுக்கு அமைய 2018 ஆண்டில் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 34% அளவான 884,555 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. 1.8 மில்லியன் விவசாய குடும்பங்கள் நாட்டில் பரந்துள்ளன. பெரும்போக பயிர்ச்செய்கை இடம்பெறும் டிசம்பர் தொடக்கம் மார்ச் வரையான காலத்தில் 557,221 ஹெக்ரேயர் மற்றும் சிறுபோகம் இடம்பெறும் மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான குறுங்காலத்தில் 327,334 ஹெக்ரேயர் காணியிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இலங்கை சுங்க திணைக்களத்தின் புள்ளிவிபர தரவுகளுக்கு அமைய 2018 ஆண்டில் 0.03 மெற்ரிக் தொன் அளவான நெல்லை இறக்குமதி செய்வதற்காக 0.019 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 248901 மெற்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக 16679 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் 66 மெற்ரிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ததன் மூலம் 11.93 வருமானம் மற்றும் 5378 மெற்ரிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் 870 மில்லியன் ரூபா வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018

ஆண்டுகளில் அரிசி மற்றும் நெல் எற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் முறையே 785.87 மற்றும் 881.93 மில்லியன் ரூபா ஆகும். அதற்கமைய ஏற்றுமதி வருமானம் 2017 ஆண்டை விடவும் 2018 ஆண்டில் 96.06 மில்லியன் ரூபா அதிகரித்துள்ளது.

மனித வள பிரச்சினை :

இள வயதினர் இந்த துறையில் ஈடுபட தயங்குதல் இந்த துறையின் பிரதானமான பிரச்சினையாகும். கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கு அமைய, ஆய்வு பிரதேசத்தில் உள்ள விவசாயிகளில் பெருமளவானோர் 46 – 55 வயது பிரிவைச் சேர்ந்தவர்களாவர். நெல் விவசாயத்தில் உள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக இளைஞர்கள் கைத்தொழில் துறை தொழில்களுக்காக செல்கின்றனர். நெற்செய்கை தொடர்பில் அக்கறை காட்டவில்லை என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

5.3.5 சோள பயிர்ச்செய்கை

திடமான தானியம் என வகைப்படுத்தப்படும் சோளப் பயிர் இலங்கை பொருளாதாரத்துடன் ஒப்பிடும் போது சிறிதளவான பங்களிப்பை கொண்டுள்ளது. நாட்டிலுள்ள மக்களில் 15% அளவான சோளம் மக்களால் நுகரப்படுகிறது. அதில் ஒரு பகுதி உள்நாட்டு சந்தையை இலக்காக கொண்டு விற்பனை செய்யப்படுவதுடன், இன்னொரு பகுதி கர்ப்பணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான திரிபோசா உற்பத்திக்காக பாவிக்கப்படுகிறது. எஞ்சிய 85% கோழி உணவுக்காக பாவிக்கப்படுகிறது.

மிகவும் இலகுவாக பயிரிடக்கூடிய பயிர் என பிரபலமடைந்துள்ள சோள பயிர்ச்செய்கை இலங்கையின் உலர் மற்றும் இடை வலய பிரதேசங்களில் உள்ள மேட்டு நிலங்களில் பயிரிடப்படுகிறது. மேலும், ஏனைய பயிர்களுடன் ஒப்பிடும் போது கிருமிகள் மற்றும் களைகளினால் ஏற்படும் சேதமும் சோள பயிரில் குறைவானதாகும். உலகம் முகங்கொடுத்துள்ள எரிபொருள் நெருக்கடி நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் உயிரியல் எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக குறிப்பிடத்தக்க அளவான சோளத்தை பாவிக்க தொடங்கியுள்ள நிலையில் உலக சந்தையில் சோளத்தின் விலை வேமாக அதிகரித்து வருகிறது. அதன் காரணமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருட்களில் உலக சந்தை விலையை விடவும் குறைவான உற்பத்தி செலவில் பயிரிடக்கூடிய பயிராக சோளம் மாறியுள்ளது.

நெல்லுக்கு அடுத்ததாக சோள பயிர்ச்செய்கையிலேயே இலங்கை விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது புதிய ஆட்சியில் சோள பயிர்ச்செய்கை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது சோள பயிர்ச்செய்கை தேசிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை அடையாளப்படுத்தும் வகையில் மஹாவலி வலயத்தில் 3000 ஏக்கர் பரப்பில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சோளம் பிரதானமாக விலங்கு உணவில் சேர்க்கப்படும் சக்திக்கான உள்ளடக்கமாக பாவிக்கப்படுகிறது. கோழிகளுக்கான உணவு உற்பத்திக்காக வருடாந்தம் 5 இலட்சம் மெற்ரிக் தொன் சோளம் தேவையாக உள்ளது. அந்த தேவையில் 250,000 மெற்ரிக் தொன் மட்டுமே நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய 250,000 மெற்ரிக் தொன் சோளம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்காக வருடாந்தம் 300 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட வேண்டியுள்ளது.

கமத்தொழில் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களுக்கு அமைய, இலங்கையில் சிறுபோகத்தில் சோள பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 21,126 விவசாயிகள் உள்ளனர். பெரும்போகத்தில் 558,054 விவசாயிகள் சோள பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். சிறுபோகத்தை விடவும் பெரும் போகத்தில் கூடுதலான விவசாயிகள் சோள பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். பெரும்போக சோளப்பயிர்ச்செய்கை மொனராகல மாவட்டத்திலேயே கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது. அந்த எண்ணிக்கை 219,947 ஆகும். சிறுபோகத்தில் கூடுதலான சோள பயிர்ச்செய்கை பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அந்த எண்ணிக்கை 21,126 ஆகும்.

கமத்தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விவசாய புள்ளிவிபர அறிக்கைக்கு அமைய, சோள பயிர்ச்செய்கைக்காக 2018 ஆண்டில் 70,895 ஹெக்ரேயர் பரப்பளவில் சோளம் பயிரிடப்பட்டது. அந்த ஆண்டின் உற்பத்தி 270,041 தொன்களாகும். அதற்கு மேலதிகமாக சோள இறக்குமதியை கருத்தில் கொள்ளும் போது, 2017 ஆண்டில் சோளம் (விதையாக) 1,432 தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய சோளம் சார்ந்த பொருட்களாக 179,589 தொன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2018 ஆண்டில் சோளம் (விதை) இறக்குமதியில் சிறிது அதிகரிப்பு காணப்பட்டது. அது 1,482 தொன்களாகும். சோளம் (ஏனைய வகையில்) 119,086 தொன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதில் பின்னடைவு காணப்படுகிறது.

அந்த அறிக்கைக்கு அமைய சோளம் (விதை) ஏற்றுமதி தொகை 2017 ஆண்டில் 0.002 தொன்னாகும் என்பதுடன், 2018 ஆண்டில் இந்த தொகை வேகமாக அதிகரித்துள்ளதனை காண முடிகிறது. அது 265 தொன்களாகும். சோளம் (ஏனைய வகையில்) வகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 2017 ஆண்டில் 2 தொன்களாக இருந்த அதே வேளை 2018 ஆண்டில் 1 தொன் என பதிவாகியுள்ளது.

இந்த கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரதான மனித வள பிரச்சினை :

❖ **தொழிலாளர் பற்றாக்குறை**

சோள பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் சில பிரதேசங்களில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவும் அதேவேளை பயிர்ச்செய்கைக்கான தொழிலாளர் செலவு அதிகரித்திருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். ஏனைய பயிர்களை விடவும் சோள பயிர்ச்செய்கைக்கு குறைவான தொழிலாளர்களின் பங்களிப்பே தேவை என நிபுணர்கள் தெளிவுபடுத்துகின்றனர். எனவே இந்த

பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பகுதிகளாக பிரித்தல் போன்ற பயிர்ச்செய்கை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. அது மட்டுமன்றி, அறுவடை இடம்பெறும் காலத்தில் இயந்திரங்களுக்கான செலவை பயிர்ச்செய்கையாளர்களால் மேற்கொள்ள முடியாமை காரணமாக தொழிலாளர்களிலிருந்து இயந்திரங்களுக்கு மாற முடியாத நிலையில் இந்த துறை உள்ளது.

❖ **நிதி அறிவு இன்மை**

சோளப் பயிர்ச்செய்கை பிரதானமாக கிராமிய கைத்தொழிலாகும் என்பதுடன், பெரும்பாலான விவசாயிகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவின்மை காரணமாக அந்த பெருமளவான குடும்பத்தவர்கள் குறைந்த வருமான பெறும் பொறியிலிருந்து தப்புவதற்காக போராடுகின்றனர். அது மட்டுமன்றி, ஒரு கிலோகிராம் சோளத்தின் விலை ரூ. 90 ஆகும். இடைத்தரகர்கள் கணிசமான அளவு இலாபத்தை பெறுகின்றனர். அதன் மூலம் போதுமானளவு வருமானம் பெறும் வாய்ப்பை உற்பத்தியாளர்கள் இழக்கும் அதேவேளை நுகர்வோர் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காக கூடுதலான விலையை செலுத்துகின்றனர்.

❖ **கோழிப் பண்ணையாளர்களுக்கான கூடுதல் கிரயம்**

சோளத்துக்கான உயர் சந்தை விலை இருப்பதன் காரணமாக கோழிப் பண்ணையாளர்களே மிகவும் பாதகமான நிலைக்கு உள்ளாகின்றனர். மொத்த உற்பத்தியில் 85% கோழி பண்ணைகளுக்கு பெறப்படுகிறது. தற்போது கோழி இறைச்சி, முட்டை மற்றும் அது சார்ந்த உற்பத்திகளுக்கு உயர் கேள்வி நிலவுவதன் காரணமாக சோள உற்பத்தியின் பெரும்பகுதி கோழி உணவுக்காக பாவிக்கப்படுகிறது. அடிப்படை உணவு நல்லதாக இருக்கும் அதேவேளை கோழிப் பண்ணையாளர்கள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பயிர்ச்செய்கையில் இந்த துறை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

5.3.6 கித்துள் பயிர்ச்செய்கைக்கான சூழமைவு அறிக்கை

கித்துள் பயிர்ச்செய்கை இலங்கையின் சம்பிரதாய விவசாய குடிசைக் கைத்தொழிலாகும். தூய கித்துள் உற்பத்திகளில் உள்ள நீரிழிவை போக்கும் பண்பு காரணமாக சுதேச மருத்துவ சிகிச்சைகளுக்காக பாவிக்கப்படுவது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இது தொடர்பாக அலுவலர்கள் கவனம் செலுத்தாமை காரணமாக கித்துள் பயிரின் எதிர்காலத்தை நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது. 70 தசாப்தத்தின் நடுப்பகுதியில் பதவியில் இருந்த பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா அவர்களால் கித்துள் கைத்தொழிலை புனரமைத்து, மறுசீரமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும், எந்தவொரு குறிப்பிடத்தக்க தாக்கமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது. (அபேசிங்ஹ, 1991)

பல்வகைப் பாவனை காரணமாக கித்துள் மரங்கள் மிகவும் பெறுமதியானவையாக கருதப்படுகின்றன. மரத்தின் பூ மிகவும் பயனுள்ள பகுதியாகும். அதன் வர்த்தக பெறுமதியை புரிந்துகொள்ளாமை காரணமாக பெரும்பாலான கித்துள் மரங்கள் பாவிக்கப்டுவதில்லை. கித்துள் மரங்கள் பல உற்பத்திகளை வழங்குகின்றன. பல உற்பத்திகளை மேற்கொள்வதற்கான மூலப்பொருளான கித்துள் சாறு மிகவும் முக்கியமானதாகும். கள்ளு, சாராயம், சர்க்கரை மற்றும் வெல்லம் போன்ற பல பொருட்களை கித்துள் மரத்தின் மூலம் மேற்கொள்ளலாம். ‘‘இலங்கை கித்துள் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்கான விவசாய திட்டம்’’ எனும் தலைப்பிலான தனது ஆராய்ச்சி கட்டுரையில் 90 தசாப்தத்தில் இலங்கையில் உள்ள 7% கித்துள் சீவும் தொழிலாளர்களின் பிரதான வாழ்வாதார தொழிலாக கித்துள் பாளை சீவுதல் மற்றும் கள்ளு இறக்குதல், கித்துள் பாணியிலிருந்து சர்க்கரை மற்றும் வெல்ல தயாரிப்பில் ஈடுபடுவதாக ஆரிய அபேசிங்ஹ அவர்கள் (1991) குறிப்பிடுகிறார்.

கித்துள் இலங்கை முழுவதும் இயற்கையாக வளரும் பயிராகும். ‘‘இலங்கையின் கித்துள் (Caryota urens) சாறு உற்பத்திகளில் கலப்படும் செய்யப்படும் முறை தொடர்பான ஆய்வு’’ எனும் ஆராய்ச்சிக் கட்டுரையில், இலங்கையில் 12 மாவட்டங்களில் கித்துள் கைத்தொழில் இடம்பெறுகிறது (Seneviratne et al 2005). இருப்பினும் 2014 ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால்வெளியிடப்பட்ட ‘‘கித்துள் கைத்தொழிலின் குறைப் பயன்பாடு’’ தொடர்பான கட்டுரையில் 18 மாவட்டங்களில் கித்துள் பாளை சீவும் தொழில் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் இரத்தினபுரி, கண்டி, மாத்தறை, பதுளை, மொனராகல, காலி, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 11 மாவட்டங்களும் அடங்குகின்றன. அதன்போது கித்துள் பூம்பாளை சார்ந்த கைத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

இரத்தினபுரி, கண்டி, பதுளை, மொனராகல, மாத்தறை, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, காலி, குருணாகல், மாத்தளை, அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அம்பாறை, அனுராதபுரம், பொலநறுவை மற்றும் புத்தளம் ஆகிய 18 மாவட்டங்களில் 3 மில்லியன் கித்துள் மரங்கள் பரந்துள்ளதாக 2014 ஆண்டில் தொகைமதிப்பு, புள்ளிவிபர திணைக்களத்தின் பங்களிப்புடன் பெருந்தோட்டத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிலிருந்து தெரியவருகிறது. அவற்றில் 6 இலட்சம் மரங்கள் முதிர்வடைந்தவையாகும். அவற்றில் 120,000 மரங்களில் சீவல் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. அந்த 18 மாவட்டங்களிலும் 35,000 த்துக்கு அதிகமான சீவல் தொழிலாளர்கள் இருப்பதாகவும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

கித்துள் பயிர் தொடர்பான துல்லியமான புளிவிபரங்கள் இல்லாதிருத்தல் காரணமாக கித்துள் சார் கைத்தொழில் தொடர்பான எண்ணக்கருவை உருவாக்குதல் மற்றும் கித்துள் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான கொள்கையை வகுப்பதில் தடையாக இருக்கிறது. அது தீர்க்கப்பட வேண்டிய பிரதான பிரச்சினையாகும். அத்துடன், இந்த பயிர்ச்செய்கையை மேம்படுத்துதல் மற்றும்

விருப்பத்துக்குரிய பயிர்ச்செய்கையாக மாற்றுவதற்கு முறையான நிறுவனத்தை அமைக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

கித்துள் சிறப் (kithul syrup) உலகின் மேப்பிள் சிறப்பாக (maple syrup) இருக்கும் என விஞ்ஞானி சிறில் பிரேமகுமார (2015) தெரிவித்துள்ளார். கித்துள் கைத்தொழிலை சர்வதேச சந்தை வரை மேம்படுத்துவதற்கும் சந்தையை கையகப்படுத்தும் ஆற்றல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார். உள்நாட்டு சந்தை மட்டுமன்றி, சர்வதேச சந்தையையும் கையகப்படுத்தும் இயலுமை இருந்த போதிலும், அண்மைக் காலத்தில் கித்துள் கைத்தொழில் தொடர்பாக நாம் கவனம் செலுத்தாத நிலை உள்ளது. இலங்கை கித்துள் உற்பத்தியை மேப்பிள் சிறப்புக்கான (maple syrup) முதன்மை பதிலீட்டு பொருளாக நியாயமான வர்த்தகப் போட்டியில் ஈடுபடலாம்.

இந்த பயிர்ச்செய்கை பல மனித வள பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. திறமையான சீவல் தொழிலாளர்கள் இன்மை கைத்தொழில் முகங்கொடுக்கும் பிரதானமான பிரச்சினையாகும். இலங்கை சமூகத்தில் இந்த கைத்தொழிலுக்கு மரியாமை இன்மை காரணமாக இளம் தலைமுறையினர் கைத்தொழிலில் இருந்து விலகிச் செல்கின்றனர். அதன் காரணமாக இந்த பயிர்ச்செய்கையில் மிகவும் குறைவான இளைஞர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். தொடர்புடைய அலுவலர்கள் இந்த பயிர்ச்செய்கை தொடர்பாக அங்கீகாரத்தை வழங்கினால் மட்டுமே பிரச்சினையை தீர்க்கலாம். இது விருத்தி செய்யக்கூடிய சாத்தியம் கொண்ட பயிராகும். இந்த பயிரை செழிப்பாக்க வேண்டும் எனின், இளம் தலைமுறையினரை ஈர்ப்பதற்காக கித்துள் பயிருக்கான அங்கீகராம் மற்றும் புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

இது முழுமையாகவே கடும் உழைப்பை மையமாக கொண்ட தொழில் என்பதனால், பாதுகாப்பு தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும். பயன்படுத்துபவருக்கு சாதகமான சீவல் தொழிலுக்கான கட்டமைப்பை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பாவிக்கப்படும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதன் மூலம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்பதுடன், சீவல் தொழிலாளர்கள் மரம் ஏறும்போது ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு கதொகுதியை வழங்கி அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

கித்துள் கைத்தொழிலுக்கு பரந்த சந்தை வாய்ப்பின்மை மற்றும் உள்நாட்டு சந்தைகளைக் கூட உற்றத்தியாளர்கள் அணுக முடியாதிருத்தல் சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையாகும். தூய்மையான கித்துள் உற்பத்திகளுக்கு உயர்ந்தளவு கேள்வி இருந்த போதிலும், உற்பத்தியாளர்கள் பொருத்தமான வகையில் சந்தையுடன் இணைக்கப்படவில்லை. எனவே, அவ்வாறான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகள் உரிய வகையில் தொடர்புபடுத்தப்பட்டால் இலங்கைக்கு கூடுதலான அன்னிய செலவாணியை பெறலாம் என்பதுடன், இயல்பாகவே இந்த கைத்தொழிலுக்கான அங்கீகராத்தையும் பெறலாம். பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை செய்வதற்கு உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டால் இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

5.3.7 சமூர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் தற்போதைய நிலைமை


சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர மற்றும் செயலாற்றுகை அறிக்கைக்கு (2018) அமைய, 21,670,000 சனத்தொகையில் 1,384,021 சமூர்த்திப் பயனாளிகள் உள்ளனர். 6.9% ஆன மக்கள் இந்த துறையில் பயன் பெறுகின்றனர். இலங்கையில் உள்ள 21,203,000 நபர்களில் 843,913 வறிய மக்கள் வசிக்கும் நிலையில் 1,407,235 பேர் சமூர்த்தி பயனாளிகளாக உள்ளனர். (இலங்கை சனத்தொகை – 2016) இருந்த போதிலும், 2020 செப்ரெம்பர் மாதம் 25 மாவட்டங்களிலும் 1,781,689 பயனாளிகள் இருந்தனர். மறுபுறமாக சமூர்த்தி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1.7 மில்லியன் மக்கள் நன்மைகளை பெற்றார்கள். கொவிட் - 19 காலத்தில் தொழில்முயற்சிகள் மற்றும் வருமானத்தை இழந்த 2.3 மில்லின் பேருக்கு நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மை பெற்றார்கள்.

இலங்கையிலுள்ள சமூர்த்தி பயனாளிகளுக்கான மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் குறைபாடு காணப்படுகிறது. வறிய மக்களின் வறுமையை ஒழிக்கும் நோக்கம் மற்றும் தொழில்முயற்சியாளர்களின் மனப்பாங்கு ஆகியவற்றுக்கு இடையில் இடைவெளி காணப்படுகிறது. போதுமான அளவு கடன் வசதிகள் இன்மை வறுமையை குறைக்காது. புயனாளிக்ள தொடர்பான முறைப்டியான அடையாளம் காணும் முறை பின்பற்றப்பட்டாத நிலையில் கண்காணிப்பு முறைமை இன்றி தொழில்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்ப தொழில்முயற்சி அபிவிருத்தி, வியாபாரத்தை விரிவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற மனித வள அபிவிருத்தி தொடர்பான விஷேட பயிற்சி திட்டங்கள் சமூர்த்தி அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

சுமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 27,191 ஆளணியில் தற்போது 25,515 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். 1837 வெற்றிடம் நிலவுகிறது. 22,611 சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். 2011 சமூர்த்தி முகாமையாளர்கள் பிராதான பணிப்பொறுப்பை நிறைவேற்றுகின்றனர். (செயலாற்றுகை அறிக்கை – 2018)


தரவுகளுக்கு அமைய குருணாகல், கம்பஹா, இரத்தினபுரி மற்றும் கண்டி மாவட்டங்களில் கூடுதலான பயனாளிகள் பதிவாகியுள்ளனர். 1,781,679 பேர் பயன் பெற்றுள்ளனர். 2018 மற்றும் 2020 ஆண்டுகளை ஒப்பிடும் போது 374,444 பயனாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2018 மற்றும் 2020 ஆண்டுகளின் சமூர்த்தி பயனாளிகள் ஒப்பீடு



உரு 1 : சமூர்த்தி பயனாளிகள் ஒப்பீடு

2018 ஆண்டில் மாவட்ட ரீதியில் சமூர்த்தி பயனாளிகள்



உரு 2 : சமூர்த்தி பயனாளிகள் பெறும் உதவிகளை வகைப்படுத்தல்

தரவு மூலம் : செயலாற்றுகை அறிக்கை (2018), சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

Samurdhi Beneficiaries out of the district population in September 21st, 2020




Figure 3 :Samurdhi Beneficiaries out of the district population

Existing Situation of Samurdhi Beneficiaries




Figure 4: Samurdhi Beneficiaries in September 21st, 2020 in Sri Lanka

Source: Samurdhi Development Authority 21, September 2020.

Training Programme for Samurdhi Beneficiaries




Figure 5: Training Programme for Samurthi Beneficiaries

சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள பிரச்சினைகள் :

1. **பயனாளிகளை அடையாளம் காணுதல்**

   ❖ அரசியல் அழுத்தம் இன்றி பயனாளிகள் தெரிவுக்கு மிகவும் பொருத்தமான முறை பாவிக்கப்படுகிறது. உதா : நுவரெலியா மாவட்டத்தில் சமூர்த்தி உதவி வழங்கப்படுதல் வினைத்திறனாக இடம்பெறுவதில்லை.

   நுவரெலியா பிரதேச செயலக பிரிவில் 2.38% பயனாளிகள் மட்டுமே உள்ளனர். (245,402 சனத்தொகையில் 5860 பேர் சமூர்த்தி பயனாளிகள்)

2. **வங்கிகள் பற்றாக்குறை**

   ❖ சமூர்த்தி வங்கி முறைமை சேவைகள் கிராமப்புறங்களுக்கு விரிவாக்கப்படலாம். நுவரெலியா மாவட்டத்திலுள்ள தலவாக்கலை வலத்தில் 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் பயணிப்பதில் மக்கள் சிரமப்படுகின்றனர். மாவட்டத்திலுள்ள 35 வங்கிகளில் 10 வங்கிகள் நுவரெலியா மற்றும் அப்பகமுவ பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ளன. பெருந்தோட்ட மற்றும் கிராமப்புற பிரிவில் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக இந்த செயற்திட்டத்தின் மூலம் அவர்களது சேவையை பிரபலப்படுத்தலாம். அத்துடன், இள வயதினர், விதவைகள் மற்றும் அங்கவீனமுற்றோர் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் தொடர்பாக சமூர்த்தி வங்கிகள் போதுமானளவு கவனம் செலுத்தவில்லை.

3. இலக்கு குழு மற்றும் கடன்

- ஒட்டுமொத்த சமூர்த்தி செயற்திட்டம் தொடர்பான பலவீனமான இலக்குகள் பிறிதொரு பிரதானமான பலவீனமாகும்.

  ஆரம்ப மற்றும் உச்ச கடன் தொகையை அதிகரித்தல், அலுவலர்களுக்கான முறையான, முறைமைப்படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்கான மதிப்பீட்டு முறைமை.

4. பயிற்சிகள் போதாமை

- சமூர்த்தி பயனாளிகளுக்கான மனித வள அபிவிருத்தி பயிற்சிகள் இன்மை மற்றும் பயிற்சி செயன்முறைகள் தொடர்புடைய வலயத்தினால் கண்காணிப்புக்கு உட்படுவதில்லை. பொருத்தமான தொடர்ச்சியான வியாபார பயிற்சி இன்மை. பெரும்பாலான பயனாளிகள் 50 வயதை கடந்தவர்கள் என்பதனால் பயிற்சி பெறுவதற்கு பொருத்தமற்றவர்களாக உள்ளனர்.
- சிறு குழுக்கள், கிராமிய சங்கங்கள், வங்கி சங்கங்களை தரப்படுத்தும் முறைமையை அறிமுகம் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல், உரிய நேரத்தில் சுற்றறிக்கைகள் கிடைப்பதனை உறுதி செய்தல்.
- அலுவலர்கள் நவீன தொழில்நுட்பத்தை பாவித்தல் மற்றும் வினைத்திறனான சேவை வழங்கல்.
- அவற்றில் அவர்களுக்கு வங்கிகள் ஊடாக வசதிகளை வழங்கும் கடன் திட்டமும் இருத்தல் வேண்டும் என அலுவலர்கள் முன்மொழிவு செய்தார்கள்.

விதந்துரைகள்


- பயனாளிகளின் அடையாளம் காணுதலை மீண்டும் முறைமைப்படுத்துதல். உதா : செயன்முறையை அவதானிப்பதற்காக ஒரு செயலணியை நிறுவதல்.
- பயிற்சி பயனாளிகளின் பயிற்சி தேவைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவர்களது மனித வள அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தலாம்.
- சமூர்த்தி வங்கி சங்கங்களை நவீனமயப்படுத்தி, மாவட்ட ஏ்றத்தாழ்வுகள் இன்றி அவர்களது சேவையை விரிவாக்குதல்.
- பயனாளிகளின் மனித வள அபிவிருத்தி தொடர்பான பயிற்சி செயன்முறையை தொடர்ச்சியாக பேணும் இயலுமை அதிகாரசபைக்கு உள்ளது. பயிற்சிகள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை மதிப்பீடு செய்தல்.
- சமூர்த்தி வங்கிகள் கிராமிய பிரதேசங்களில் தமது சேவைகளை விரிவாக்கலாம். உதா : நுவரெலியா
- திணைக்கள வெற்றிடங்களை நிரப்பலாம்.
- சுமூர்த்தி வங்கி கட்டமைப்பை டிஜிற்றல்மயப்படுத்தி, யுவுஆ உருவாக்கப்படவுள்ளது.
- கடன் தொகை அதிகரித்து, இலங்கை அரச மற்றும் தனியார் வங்கிகளை தொடர்பு கொள்வதற்கு பயனாளிகளுக்கு விதந்துரைத்தல்.
- அரசியலில் இருந்து விலகும் செயற்பாடுகளை பின்பற்றுதல்.

5.3.8 இலங்கையின் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான சூழமைவு அறிக்கை

கூட்டுறவு அபிவிருத்திக்கான சர்வதேச சூழமைவு

இந்தியாவில் கூட்டுறவுத் துறையில் 13.8 மில்லியன் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 92% தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக சுயதொழில் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் 1997 ஆண்டில் 58,281 முழு நேர தொழில்களும், 95,374 பகுதிநேர தொழில்களும் உருவாக்கப்பட்டுள்ளது. முழுநேர தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டை விடவும் 409 குறைந்துள்ள போதிலும், பகுதிநேர தொழில்கள் 4.4% அதிகரித்துள்ளது. கொரிய குடியரசில் விவசாய கூட்டுறவு இயக்கம் பெடரேசன் மட்டத்தில் 17,448 பேர் மற்றும் அங்கத்துவ கூட்டுறவு மட்டத்தில் 53,698 மேலதிக ஆளணியினர் 1997 ஆண்டின் இறுதியில் பணியாற்றியிருந்தனர். இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தில் 1997 ஆண்டில் 37,617 பேர் பணியாற்றினார்கள். பிலிப்பைன்ஸ் நாட்டில் தேசிய தொழிலாளர் படையில் கூட்டுறவு துறையின் பங்களிப்பு 1997 ஆண்டில் மொத்த தொழிற்சந்தையில் 5.01 மில்லியன் அதாவது 16.24% ஆனது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறை ஊடாக 2000 ஆண்டளவில் 20 மில்லியன் தொழில்வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கூட்டுறவை மேம்படுத்துதல் மற்றும் முன்னேற்றுவதற்கான குழு COPAC, 1999 மே 17-28)

கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலைமை



அட்டவணை – 1 இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்

இலங்கை கூட்டுறவு இயக்கத்துக்கு நீண்ட வரலாறு உள்ளது. 2012 ஆண்டில் 14,985 சங்கங்கள் இருந்த போதிலும், 2016 ஆண்டில் அந்த எண்ணிக்கை 12,379 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. 2013 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆண்டில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 257 உறுப்பினர்களால் அதிகரித்துள்ளது.

இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை



அட்டவணை – 2 இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை

உரு – 2 ற்கு அமைய, இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 8.8 மில்லியன் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இது இலங்கையின் பாரிய உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இயக்கமாகும். இந்த புள்ளிவிபர அட்டவணை சங்கங்களில் மக்களின் ஈடுபாட்டை காட்டுகிறது. அவர்களது வினைத்திறனான உற்பத்திக்கான பங்களிப்பை விடவும், ஈர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானதாகும்.

அமைப்புகள், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை

அட்டவணை – 1 சங்கங்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை

இல	அமைப்பின் வகை	அமைப்புகளின் எண்ணிக்கை	இயங்கும் அமைப்புகளின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	நேரடி தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை
1	மாகாண ஆரம்ப மட்ட கூட்டுறவுச் சங்கங்கள்	12,130	7,857	8,380,964	35,373
2	நாடு தழுவிய ஆரம்ப மட்ட கூட்டுறவுச் சங்கங்கள்	59	36	408,543	1154
3	இரண்டாம் நிலை கூட்டுறவுச் அமைப்புகள்	174	143	9,443	2064
4	மூன்றாம் நிலை கூட்டுறவுச் அமைப்புகள்	16	11	1,447	361
5	மொத்தம்	**12,379**	**8,047**	**8,800,397**	**38,952**

இலங்கையில் உள்ள 12,379 கூட்டுறவு சங்கங்களில் 8,047 சங்கங்கள் வினைத்திறனாக இயங்குகின்றன. இருப்பினும், 4,332 சங்கங்கள் வினைத்திறனாக இயங்குவதில்லை. அந்த சங்கங்கள் இயங்குகின்றனவா அல்லது செயலிழந்துள்ளனவா என்பது தொடர்பான தரவுகள்

போதாது. இலங்கையின் கூட்டுறவுத் துறை அபிவிருத்தி நிலையை புரிந்து கொள்வதற்கான விஷேட ஆய்வு மேற்கொள்ளுதல் உதவியாக அமையும். இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 12,310 சங்கங்கள் உள்ளன. ஆகக்கூடுதலான எண்ணிக்கையான சங்கங்கள் வடமேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது ஆகக்கூடுதலான சங்கங்கள் 1,967 பதிவு செய்யப்பட்டுள்ளன. (புள்ளிவிபர அறிக்கை – 2016)


கூட்டுறவு துறையில் நேரடி தொழில் வாய்ப்பு

அட்டவணை : 2 இலங்கையில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் நேரடி தொழில் வாய்ப்பு

பால்	2009	2010	2011	2012	2013	2014	2015	2016	விகிதம்
ஆண்	23,477	23,507	16,879	15,445	20,281	20,865	20,207	13,911	35.71%
பெண்	28,220	27,009	23,501	23,329	25,694	22,989	25,595	25,041	64.28%
மொத்தம்	**51,697**	**50,516**	**40,380**	**38,774**	**45,975**	**43,854**	**45,802**	**38,952**	**100%**

2009 ஆண்டில் 51,697 மற்றும் 2016 ஆண்டில் 38,952 நேரடி தொழில் வாய்ப்புகள் கூட்டுறவுத்துறையில் இருந்ததாக அட்டவணை 2 மற்றும் உரு 3 இல் காட்டப்படுகிறது. கூட்டுறவுத் திணைக்களத்தில் 64% பெண் ஊழியர்களும், 36% ஆண் ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். தரவுகளுக்கு அமைய 2009 ஆண்டுடன் ஒப்பீடாக 2016 ஆண்டில் ஆண்கள் தொழிலில் ஈடுபடும் எண்ணிக்கை பத்தாயிரத்தால் குறைவடைந்துள்ளது.

நேரடி தொழில் வாய்ப்பு



உரு : 6 நேரடி தொழில் வாய்ப்பு

இலங்கை கூட்டுறவுத் துறையில் மனித வள அபிவிருத்திகான பயிற்சிகள்.

நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறை ஊழியர்களின் திறன் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்காக மூன்று பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன.

- ❖ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் : பொல்கொல்ல பயிற்சி நிலையம்
- ❖ வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிலையம் - வவுனியா
- ❖ கிழக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிலையம் - கல்முனை

2019 ஆண்டில் வடக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிலையத்தினால் 16 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறை அலுவலகங்களில் பணியாற்றும் 998 அலுவலர்களை மட்டும் இலக்காக கொண்டு அந்த பயிற்சிகள் நடத்தப்பட்டன. பின்வரும் விடயப்பரப்புகள் பயிற்சிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கூட்டுறவுத் துறை தொடர்பான அறிவு, கணக்காய்வு முறைமை, சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல், வினைத்திறனான நிதி முறைமை, தீர்மானம் எடுத்தல், வியாபார வளர்ச்சிக்கான நிலையான தன்மை மற்றும் வளங்கள் தொடர்பான பயிற்சி.

கூட்டுறவுத் துறையின் பிரச்சினைகள் :

❖ **பயிற்சி**

அனைத்து உறுப்பினர்களுக்கும் அன்றி ஊழியர்களுக்கே கூட்டுறவு பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வவுனியாவில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் கூட்டுறவு ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான சில தமிழ் மொழிமூல பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD) கூட்டுறவு துறை ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்குகிறது. கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் ஏனைய அலவலர்கள் அந்த துறையில் ஈடுபட்டள்ளனர். எனவே, மனித வள அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளை தொடர்புடைய நிறுவனங்கள் விரிவுபடுத்தலாம். நிறுவனத்தின் அலுவலர்களை பயிற்றுவித்தல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் நிறுவன அபிவிருத்தி மற்றும் அவற்றின் உறுப்பினர்களது ஆற்றல் விருத்தி தொடர்பான பயிற்சிகள் இல்லாதிருத்தல் பிரதான பிரச்சினையாகும்.

- ❖ இலங்கை கூட்டுறவு திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய 38,952 ஊழியர்கள் கூட்டுறவுத் துறையில் தொழில் புரிகின்றனர். 2009 ஆண்டில் அந்த எண்ணிக்கை 51,691 ஆக இருந்தது. சில ஆண்டுகளில் அதாவது 2016 ஆண்டில் 38,952 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. தொழில் வாய்ப்பு இழக்கப்படுதல் தொழிலின்மை பிரச்சினையை ஏற்படுத்தும்.
- ❖ கூட்டுறவு சங்கங்களை வெளித் தரப்பினர் கணக்காய்வு செய்ய முடியாதிருப்பதனால் ஏனையோரின் விமர்சனத்துக்கு உள்ளாகலாம்.
- ❖ தனியார் துறை நுண்நிதி நிறுவனங்களை வரையறுத்தல் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுதலை ஊக்குவித்தல்.
- ❖ விவசாயம், பற்றிக், மிளகு மற்றும் கித்துள் போன்றவற்றுக்கான முதலீடு போதாமை.

- ❖ கூட்டுறவு வங்கிகள் தற்போதும் சம்பிரதாயமான பதிவுகள் மற்றும் பேரேடுகள் பாவிக்கப்படுகின்றன. சிறிய எண்ணிக்கையான வங்கிகள் மட்டுமே நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கிராமிய வங்கிகள் தமது வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் செயற்படவில்லை.
- ❖ கூட்டுறவுத் திணைக்களம் நாடு முழுவதும் தனது சேவையை வழங்கினாலும், கிராமிய, பெருந்தோட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினருக்கான சேவைகள் பொதுமானதல்ல.
- ❖ பெரும்பாலான கூட்டுறவு சங்கங்கள் சுற்றுலாத்துறை மற்றும் கடன் சேவை போன்ற தேசிய உற்பத்திக்காக முதலீடு செய்வதில் அக்கறை இல்லாத நிலையில் சேவை வழங்க முற்படுகின்றன.
- ❖ அரசியல்மயமாக்கல் காரணமாக கிராமிய பிரதேசங்களில் உள்ள சங்கங்களில் ஊழல் இடம்பெறுதல் அல்லது செயலிழப்பு ஏற்படுகிறது. மையப்படுத்தப்படுதல் இயல்பான இயக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தலாம்.

விதந்துரைகள் :

❖ **தொழில்வாய்ப்பு**

இந்த தொழில்துறையில் ஏன் தொழில் இழப்பு ஏற்பட்டது. அரசு கமத்தொழில் துறை தொடர்பில் அக்கறை செலுத்தி முதலீடு செய்யலாம் எனின், அதன் மூலம் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கலாம். இந்த தொழிற்துறையில் 2016 ஆண்டில் பெண் ஊழியர்கள் 65% ஆக இருந்தனர். அவர்களது சங்கங்களின் நிதி ஆற்றலைப் பலப்படுத்தி, வலுப்படுத்தினால் இலங்கையில் கூடுதலான தொழில் வாய்ப்புகளை உருவாக்கலாம்.

❖ **பயிற்சி**

- ➢ தமிழ் மொழிமூலம் நடத்தப்படும் சில பயிற்சிப் பாடநெறிகள் உள்ள போதிலும், அது நாடு முழுவதுக்குமான கேள்விக்கு போதுமானதல்ல. இரு மொழிமூல (சிங்களம் மற்றும் தமிழ்) பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு அவர்களது பயிற்சி தேவைப்பாடுகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றலாம் என்பது அதன் கருத்தாகும்.
- ➢ பயிற்சிகளை கூட்டுறவு சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளுக்கும் விரிவுபடுத்தலாம். பெரும்பாலான பயிற்சிகள் அவர்களது ஊழியர்களை இலக்காக கொண்டுள்ளன. அது உறுப்பினர்களை பழக்கப்படுத்தவதாக அமையும் நிலையில் முயற்சித்தல் பயனுள்ளதாக இருக்கும். கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆளணியினரை இலக்காக கொண்டு தற்போதுள்ள பயிற்சி வுழுவு பயிற்சியாக மீள ஏற்பாடு செய்யப்படலாம். அது பிரயோக தந்திரோபாயத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி

- ❖ கூட்டுறவு சங்கங்களின் பலவீனத்தை அடையாளம் கண்டு, கிராமிய பிரதேசங்கள் மற்றும் பெருந்தோட்ட துறையில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி ஊடாக அவர்களது ஆற்றலை

பலப்படுத்துதல். தொடர்புடைய அலுவலர்கள், திணைக்களம் கூட்டுறவு சங்கங்களின் பலவீனங்களை அடையாளம் கண்டு கிராமிய பிரதேசங்கள் மற்றும் பெருந்தோட்ட துறையின் அவற்றின் ஆற்றலை பலப்படுத்தலாம். பெரும்பாலான பெருந்தோட்ட மக்களுக்கு கூட்டறவு சங்கங்கள் தொடர்பான அறிவு குறைவாக உள்ளது. தரவுகளில் சுட்டிக் காட்டப்படும் வகையில் கிராமிய பிரதேசங்களில் சங்கங்கள் குறைவாக இருப்பதனால் உறுப்பினர்கள் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பில் அக்கறை காட்டுவதில்லை.

புதிய கைத்தொழில்கள்

- பற்றிக், மிளகு மற்றும் கித்துள் போன்ற உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்காக கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைதல் கிராமிய கூட்டுறவு சங்கங்களின் வர்த்தக மேம்படுத்தலுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

டிஜிற்றல்மயப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் நட்புறவு

- ATM அட்டையை அறிமுகம் செய்தல், கிராமிய மற்றும் நகர பிரதேசங்களில் உள்ள வங்கி கட்டமைப்புகளை நவினமயப்படுத்தல், டிஜிற்றல்மயமாக்கல் வாடிக்கையாளர் மற்றும் நுகர்வோரை கூடுதலாக கவரும். எனவே சம்பிரதாய முறைமையிலிருந்து விலகுதல் தொடர்பாக சிந்தித்தல் மிகவும் உகந்ததாகும். கூட்டுறவு நகரங்களை பலப்படுத்ததல், ATM மற்றும் கடன் அட்டை கட்டமைப்பை அறிமுகம் செய்தல். நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் இயங்கும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துதல்.

நல்லாட்சி கொள்கையை அமுல்படுத்துதல்

- கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை மூன்றாம் தரப்பு அல்லது வெளி தரப்பினர் கணக்காய்வு செய்யக்கூடிய வகையில் இருந்தால், அது சிறந்த செயற்பாடாக அமையும் எனபதுடன், கட்டமைப்பில் ஊழல் மேற்கொள்ள முடியாது என்பதுடன், அனைத்து சங்கங்களினதும் வகைகூறல், பொறுப்புக் கூறல், பால்நிலை சமத்துவம் மற்றும் சட்டத்தின் ஆட்சி போன்ற நல்லாட்சி முறைகளை அமுல்படுத்தலாம்.

அரசியல் கலப்பற்றதாக இருத்தல்

- கூட்டுறவுக்கான வர்த்தக சுதந்திரத்தை வழங்குவதற்காக மாகாண சபைகளின் ஒத்துழைப்புடன் கூட்டுறவு சட்டங்களை மாற்றுதல். சுங்கத்தின் அதிகாரங்களை உரிய வகையில் பன்முகப்படுத்துவதுடன், இயக்குனர் சபை உறுப்பினர்கள் மற்றும் சங்கங்கள் அரசியல் கலப்பின்றி செயற்படுவதனை உறுதி செய்யுங்கள்.

சேவைகளை விரிவாக்குதல்

- நாடு முழுவதும் சேவை மற்றும் ஆளணியினரை விரிவாக்குதல். உதாரணம் : விஷேடமாக, பெருந்தோட்டத்துறையில் வீடுகளை மட்டும் இலக்காக கொண்டு அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள். பால் உற்பத்தி மற்றும் மரக்கறி பயிருக்கு கூடுதலான வாய்ப்பு உள்ளது. ஓரங்கட்டப்பட்ட சமூகத்திலும் கூட்டுறவுத் திணைக்களம் தமது சேவையை விரிவாக்க வேண்டும்.
- விவசாயம், பால் உற்பத்தி, மீன்பிடி மற்றும் சிறு பயிர் உற்பத்தி ஆகிய துறைகளில் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் உற்பத்தி கூட்டுறவு கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- பிராந்திய மற்றும் சர்வதேச கூட்டுறவு சங்கங்களுடன் பிணைப்பை ஏற்படுத்துதல்.

சம்பிரதாய கைத்தொழில்கள் தொடர்பான மூலப்பொருட்களை வழங்குதல், மூலதனத்தை பெறுதல் மற்றும் சந்தைப்படுத்தலுக்கு உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

5.4 திண்மக் கழிவு முகாமைத்துவ தொழில்முனைவோரை உருவாக்குதல்

இலங்கையின் கழிவகற்றல் துறையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் மாகாண சபைகள் அமைச்சின் திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் இந்த துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோரின் ஆற்றலை விருத்தி செய்வதற்கான பாடநெறித் தொகுதி உருவாக்கப்பட்டது. அந்த பாடநெறியில் கழிவு பிரச்சினைக்கு நீண்டகால தீர்வைக் காணுதல் மற்றும் இந்த துறையில் புதிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. அந்த பாடநெறியின் முன்னோடி செயற்திட்டமாக தேசிய மனித வள அபிவிருத்தி சபை 2019 ஒக்டொபர் 20 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்முயற்சியாண்மை திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திண்மக் கழிவு முகாமைத்தவம் தொடர்பான தொழில்நுட்ப அறிவு மற்றும் சிறந்த முகாமைத்தவ திறன்களைக் கொண்ட தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறியை மேற்கொள்ளுதல் இந்த செயற்திட்டத்தின் முதன்மையான குறிக்கோளாகும். மேலும், செயற்திட்டம் பின்வரும் விஷேட குறிக்கோள்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. :

- தொழில்முயற்சியாண்மை முனைப்புகளை மேம்படுத்தும் மனப்பாங்கை உருவாக்குதல்.
- முறையான வர்த்தக செயன்முறைகள் தொடர்பாக தெளிவூட்டுதல்.
- சம்பிரதாய வகுப்பறை கற்பித்தலுக்கு புறம்பாக, தேவையான முகாமைத்துவ அறிவை வழங்கும் எண்ணக்கரு / கோட்பாடுகள் மற்றும் பிரயோக செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான பயிற்சிப் பட்டறைகள் / பயிற்சிகளை அறிமுகம் செய்தல்.

மாகாண சபைகள் அமைச்சின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து மாகாண சபைகளையும் உள்ளடக்கியதாக திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக ரீதியான கற்கையை வெற்றிகரமாக நிறைவு செய்யும் அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

திண்ம கழிவு முகாமைத்துவ துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு இந்த பாடநெறி பயனுள்ளதாக அமையும். தற்போது 22 பயிலுனர்கள் தொழில்முயற்சியாண்மை, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு தொடர்பான கற்றலில் ஈடுபட்டு, பாடநெறியை பயின்று வருவதுடன், அவர்கள் இந்த பயிற்சியின் மூலம் தமது வியாபாரத்தை மேலும் மேம்படுத்தலாம். அத்துடன், பாடநெறியின் தரத்தை மேம்படுத்துவதற்காக NVQ மட்டத்தை TVEC நிறுவனத்திடமிருந்து பெற எதிர்பார்க்கப்படுகிறது.

5.5 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நோக்குக்கு அமைய, இலங்கையின் கல்வித் துறையுடன் தொடர்புடைய பங்குதாரர்களின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்காக வருடாந்த புள்ளிவிபர சஞ்சிகையை வெளியிடுவதற்கு தேசிய மனித வள அபிவிருத்தி சபை முகாமைத்துவம் தீர்மானித்தது. அது தொடர்பாக 2015 ஆண்டிலிருந்து நான்கு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. பிந்திய வெளியீடு 2020 ஆண்டு வெளியிடப்பட்டது.


அந்த வெளியீடுகளில் பொதுக் கல்வி, மூன்றாம் நிலை தொழிற்பயிற்சி மற்றும் உயர் கல்வி துறை தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் அடங்கியுள்ளன. இணைய தளங்களில் உள்ள இரண்டாம் நிலை தரவு மூலங்கள், இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு அனைத்து தரவுகளும் சேரிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கல்வித் துறை தொடர்பில் அக்கறை கொண்டுள்ள ஆராய்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்களுக்கு அந்த சஞ்சிகைகளின் தரவுகள் பயனுள்ளதாக அமையும்.

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2020 ஆண்டின் வெளியீடுகள்

2020 ஆண்டின் வெளியீடுகள், அறிக்கைகளின் படங்கள் கீழே காட்டப்படுகின்றன.



கொவிட் 19 அறிக்கை



புள்ளிவிபர சஞ்சிகை - 2020

7. நிதியியல் நிலமைக் கூற்று

31.12.2020ம் திகதியன்று

இ.ரூபாவில்

	குறிப்பு	2020		2019		மதிப்பீடு செய்யப்பட்டது
சொத்துகள்						
நடைமுறைச் சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்கு சமனானவை	1	17,476,958.89		17,297,237.12		17,000,000.00
பெறுவனவுகள்	2	40,062.82		40,062.82		41,000.00
கையிருப்புகள்	3	788,136.66		679,542.34		700,000.00
முற்கொடுப்பனவுகள்	4	84,468.92		270,413.02		85,000.00
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	5	3,319,639.45		3,271,452.39		3,506,125.00
		21,709,266.63		**21,558,707.69**		**21,332,125.00**
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை						
உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள்	6	9,950,577.86		11,355,967.56		10,000,000.00
வாகனங்கள்	6	1,449,060.65		4,450,549.22		1,500,000.00
மென்பொருள்		221,400.83		324,653.33		222,000.00
ஏனைய நிதியியல் சொத்துக்கள்	6	418,540.63		531,137.56		156,962.60
		12,039,579.97		16,662,307.67		11,878,962.60
மொத்தச் சொத்துகள்		**33,748,846.60**		**38,221,015.36**		**33,211,087.60**
பொறுப்புகள்						
நடைமுறைப் பொறுப்புகள்						
கொடுப்பனவுகள்	7	1,718,483.37		970,682.65		1,797,562.28
குறுகிய கால ஏற்பாடுகள்	8	1,116,242.82		890,292.82		850,230.00
		2,834,726.19		**1,860,975.47**		**2,647,792.28**
நடைமுறையல்லா பொறுப்புகள்						
ஊழியர் நன்மைகள்	9	3,621,267.50		3,323,854.88		3,000,000.00
		3,621,267.50		**3,323,854.88**		**3,000,000.00**
மொத்தப் பொறுப்புகள்		**6,447,993.69**		**5,184,830.35**		**5,647,792.28**
தேறிய சொத்துக்கள்		**27,292,852.91**		**33,036,185.01**		**27,563,295.32**

தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமைப் பங்குகள்

கீழ்வருவனவற்றினால் மூலதனம் வழங்கப்பட்டது			
பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம்	3,000,000.00	3,000,000.00	3,000,000.00
மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள்	13,490,249.80	13,490,249.80	13,490,249.80
அரச நன்கொடைகள் - மூலதனம்	10,073,045.52	10,073,045.52	10,073,045.52
திரட்டப்பட்ட மிகை/(பற்றாக்குறை)	729,557.59	6,472,889.69	1,000,000.00
மொத்த தேறிய சொத்துகள் மற்றும் உரிமைப் பங்குகள்	**27,292,852.91**	**33,036,185.01**	**27,563,295.32**

